தமிழரிடையே அம்புகள்

கே.வீ.வீ-பழமநீ

தமிழரிடையே

அன்புப் போர்

பைந்தமிழ்ச் செல்வன்,

C. R. பரநியாண்டி,

விளம்பர அமைச்சர், ஒய். எம். சி. எ., பட்டிமன்றம்.

K. V. வீரராகவன், B.A., B.L.,

வெளியிட்டோர் ;

நியூ இந்தியா புக் ஹவுஸ்

இராமச்சந்திரபுரம்,

புதுக்கோட்டை ஸ்டேட்.

பதிப்புரிமை] [விலை ரூ. 1-0-0

முதற் பதிப்பு 1947

உரிமையுரை

தந்நலமே பெரிதெனக் கருதாது, தந்நலத்தையும மறந்து சமத்துவக் கொள்கையோடு அல்லும் பகலும் தமிழ்த் திருத் தொண்டில் ஈடுபட்டுப் பணி செய்யும் உழைப்பாளிகளாகிய

1. திரு பி. ஜி. இராஜகோபாலன், M. A.,
2. ,, சூ. கி. ஜானகிராமன்,
3. ,, சிறுவை. மோகனசுந்தரம்,
4. ,, இரா. லோ. லிங்கராஜ்,
5. ,, ஆதி. தேவநாதன்,
6. திருமதி நல்லம்மா (மேரி அரசிக் கல்லூரி)
7. ,, வசந்தா (,,)

இவர்களுக்கு இந்நூல் அன்பு மலராக இலங்குக!

Printed at the Rajan Electric Press, Madras.
Copies 1250—For T. P. No. 217—8-'47

பேசுகிறோம்—கேளுங்கள்!

தமிழ்த்தென்றலை நுகர்ந்து இலக்கியப் பூங்காவில் இன்பக்களி வெறி கொண்டு நடமாடி வரும் நாங்கள் தண்டமிழ்த் தலைவர்களைத் தாக்கும் நோக்கம்கொண்டு எழுதியதல்ல இச் சிறு புத்தகம். எதிர்காலத் தமிழின் எழிலைப்பற்றி ஏங்கி ஏங்கி இன்பக் கனவுகள் காணும் நாங்கள் தற்காலத்தமிழின் தலைமைத் தொண்டர்கள் சிலரை எடுத்துக்கொண்டு அவர்கள் இன்னும் என்ன செய்யக்கூடும் என்பதை எடுத்துரைப்பதே எங்கள் நோக்கம். தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களை இப்பொதுக் கடிதங்களின் மூலம் திருத்தியோ மாற்றியோ விடுவோம் என்று நாங்கள் பகற் கனவு காண வில்லை. சீரிய செஞ்சொல் தலைவர்களைக் கூரிய அம்புகள் கொண்டு தாக்கி நோகச் செய்ய நாங்கள் ஒருநாளும் விரும்பமாட்டோம். தமிழ்ப் பேரறிஞர்களின் பண் பெற்ற நடை எங்கள் புன்மொழிகளால் திருந்தும் என்ற இறுமாப்பும் எங்களுக்கில்லை.

பின் எதற்கு இப் புத்தகம் என்றால், தமிழ் மக்களின் விருப்பத்தை அவர்களின் பிரதிநிதியாக நின்று தெளிவுறுத்தவே! பொதுக் கடிதங்கள் என்று தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுத்துறையைக் கையாள நாங்கள் விரும்புகிறோம். கடித இலக்கியம் தமிழுக்குப் புதிது. இந்தப் புதுமையில் இனிமையும் இருக்கும்; இன்னுமையும் இருக்கலாம். குற்றங் குறைகளும் மட்டற்று இருக்கலாம். தமிழ் தழைத்தோங்க, தமிழர் புதுவாழ்வு பெற, தமிழ் இலக்கியம், தமிழ்ச் சமுதாயம் முழுமைக்கும் பொதுவுடைமையாக இக்கடிதங்கள் உதவினால், நாங்கள் கோரிய பலன் கிட்டும்.

எங்கள் இன்பக்கனவுகளில் பாமரரும் தமிழ்படிப்பார்கள்; தமிழ்ப் புத்தகங்கள் மதிப்பற்ற மாணிக்கங்களானாலும் மலிவுப் பிரசுரங்களாகவே திகழும் "வீட்டுக் கொரு புத்தகசாலை விதிக்கொருபள்ளி" என்ற பாரதியார் கனவு நனவாகும். தமிழ் எழுத்தாளர்கள் அறிவியல், அரசியல், பொருளாதாரம், தத்துவம் முதலிய பல துறைகளில் புத்தகங்கள் குவிக்க முற்படுவார்கள், இன்னும் இப்படி எத்தனையோ முன்னேற்றங்கள்! இதற்கெல்லாம் இப்போதுள்ள எழுத்தாளரல்லவோ வழி காட்டவேண்டும்?

ஆகவே, அவர்களுக்கு நாங்கள் எழுதுகிறோம்; அவர்கள் மூலம் தமிழர்கள் எல்லோருக்கும் எழுதுகிறோம். அல்லது தமிழர்கள் அனைவருக்குமாக நாங்கள் எழுதுகிறோம். வேறுபட்ட கருத்துகள் இருப்பின் வேண்டி வரவேற்கிறோம், வந்தனம்.

அன்பு, அன்பு, அன்பு,

'சக்கிராசம்'
80 திருப்பள்ளித்தெரு
சென்னை-1. 15-8-47

C. R. பழநியாண்டி
K. V. வீரராகவன்

(குறிப்பு:—சிறந்த எழுத்தாளர்களுக்கு எழுதுவதில் எறக்குறைய அவர்கள் நடையையே ஒட்டி எழுத முயற்சி செய்திருக்கிறோம். அதில் உள்ள சிறப்புகளை அவர்களுக்கும் குறைகளை எங்களுக்கும் அளித்துவிடுங்கள்!)

மதிப்புரை.

தமிழன்பர்களுக்கு,

நீங்கள் இப்போர் வீரர்கள் இருவரையும் அறிவீர்கள் அல்லவா? நண்பர் வீரராகவன் ஒரு வழக்கறிஞர்; நல்ல இலக்கிய மோகமுடையவர். அன்பர் பழநியாண்டி ஒய். எம். ஸி. ஏ. பட்டிமன்ற சிருஷ்டிக்கர்த்தர்; சுவாமி சுத்தானந்தரின் பரம சிஷ்யர்.

இவர்கள் இருவரும் தம் இலக்கிய பரிச்சயத்தை அரணாகக்கொண்டு, தமிழிலக்கியத்தின் பல்வேறு வகைப்பட்ட துறைகளிலும் ஈடுபட்டுள்ளவர்கள் மீது பேனாப் போர் தொடுத்துள்ளனர். பலர் மீது அம்பு விழுகிறது, ஒரு சிலர் மீது மலர்களும் விழுகின்றன.

இலக்கியத் துறையிலிருந்தே அநேகமாக ஓய்வு எடுத்துக்கொண்டுள்ள திரு. வி. க. மறைமலை அடிகளார் தொட்டு பலரையும்பற்றி தாக்ஷிண்ய மற்ற முறையில் மனதில் பட்டதை இவர்கள் வெளியிடுகின்றனர். வார்த்தைப் போரானதினாலே அவர்களை விளித்தே, தாம் கூற வேண்டுவதைக் கூறுகின்றனர். இத்தகைய முறையை இதுவரை அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் சம்பந்தப்பட்டவரைதான் பத்திரிகைள் அனுஷ்டித்து வந்தன. இப்போது அன்பர்கள் இலக்கியத்துறையிலும் அதைப்புகுத்துவது வரவேற்கத் தக்கதுதான்.

இந்தப் போரினால் யாரையும் திருத்திவிடமுடியாது என்று எண்ணினாலும், தமிழகத்தின் அபிப்பிராயத்தை வெளியிடுவதே தங்கள் நோக்கம் என ஆசிரியர்கள் தங்கள் முன்னுரையில் கூறுகின்றனர். எனினும் இவர்கள் எழுதுவதெல்லாம் தமிழன்பர்கள் அபிப்பிராயம் என்று கொள்வதற்கில்லை. உதாரணமாக இவர்கள் சிலருக்குச் சூட்டும் புகழ்மாலை பெற அவர்கள் பாத்திரர்கள்தானா என்று எனக்கு ஐயம் தோன்றுகிறது. அங்ஙனமே உங்களுக்கும் தோன்றுமென்று நினைக்கிறேன்.

முதியவர்களைவிட்டுவிட்டு, சிறுகதை உலகின் மன்னர் என்று கூறப்பெறும் 'புதுமைப் பித்தன்', அவர் வாரிசுகள் என்று மார்தட்டும் ரகுநாதன், வல்லிக்கண்ணன், அழகிரிசாமி போன்றாரோடும், அ. இ. ரே. வில் சேவை செய்யும் சோமு, சுந்தா, சுகி, துறைவன் போன்றாரோடும் போர் தொடுக்க முயன்றிருக்கலாம்.

இதில் போர் தொடுத்த சிலரோடு எந்த விஷயத்திற்காகப் போராடவேண்டும் என்பதை இரட்டையாசிரியர்கள் மறந்துவிட்டனரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. உதாரணமாக திரு அண்ணாத்துரையோடு நடத்தும் போரில் அவரை ஒரு 'மதத்துவேஷி' என்று பட்டஞ் சூட்டுவதோடு இவர்கள் நின்றுவிடுகின்றனர்; அண்ணாத்துரையின் கொழுத்த தமிழ் நடை, அவர் எழுதிய 'சிவாஜி கண்ட ஹிந்து ராஜ்யம்,' 'சந்திரோதயம்',' நீதி தேவன் மயக்கம்', சினிமா முதலாளியிடம் ரூபாய் பதினையாயிரம் பரிசுபெற்ற 'வேலைக்காரி', 'ஓர் இரவு' ஆகிய நாடகங்கள் குறித்து ஒருவரிகூட இல்லை! முதுகிழவர் கவிமணி தேவியின் கவிதைகள், எழுந்த தமிழகத்தைத் தூங்கப்பண்ணுவனவாக இருக்கின்றன என்று கூறுபவர்கள் அடுத்த பாராவில் அவர் கவிகள் தமிழுக்கு ஜீவனை அளிக்கின்றன என்று கூறுவதுகவனக்குறைவாலா?

இவற்றிற் கிடையேயும் அது ஒரு நல்ல நூல் என்று நான் கூறினால் நீங்கள் வியப்படையலாம் இதன் கடைசியிலுள்ள இருகட்டுரைகளும் இத்தனைக்கு விருந்தளிப்பவையாகும் தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற ஒரே ஆர்வத்தினால் இது எழுதப்பட்டிருப்பதால் இதை நீங்கள் அவசியம் படித்துப்பார்த்து ஆசிரியர்களுக்குச் சரியான முறையில் ஊக்கம் அளிக்க வேண்டும்.

இப்படிக்கு,

உங்களில் ஒருவன்,

ர. பா. மு. கனி.

அணிந்துரை

தமிழரிடையே அன்புப் போர்! வியப்பாக இல்லையா? போர் எங்ஙனம் அன்பை அடிப்படையாகக் கொண்டு எழும் என்றுதானே வியப்படைகிறீர்கள்?

பார்க்கப் போனால் இதில் வியப்பொன்றுமில்லை. வாழ்க்கையில் 'ஊடல்' நிகழ்த்தத் தெரிந்த ஒரு சிலர், அவ்வொரு சொல்லே 'அன்புப் போர்' என்னும் இரு சொற்களாக உருவெடுத்திருக்கிறதென்னும் உண்மையை எளிதில் தெரிந்து கொள்வார்கள். கணவன் மனைவியரிடையேதான் அன்புப் போர் நிகழவேண்டுமென்பதில்லை. அது எல்லார் மாட்டும் நிகழலாமல்லவா? பதங் கெட்டுவிடாமல் அன்புப் போர் நடத்தி வெற்றிகண்டு, அதனாலுண்டாகும் சுவையை அனுபவிக்கத் தெரிந்தவர்கள் புண்ணியவான்கள், புண்ணியவதிகள் என்றே நான் கருதுகிறேன்.

அத்தகைய தீஞ்சுவையைத் தாங்களும் முழுக்க முழுக்க அனுபவித்து, அதைத் தமிழ்மக்கள் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்திருக்கின்றனர் நண்பர்கள் பழம்நீயும், கே. வீ. வீரராகவனும். ஆகவே, அவர்கள் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள்

பழம்நீயையும் வீரராகவனையும் பன்னெடுங்காலமாக எனக்குத் தெரியும். தமிழார்வ மிக்க இளைஞர்கள். தமிழ்ப் பற்றில் யாருக்கும் சளைக்காத வர்கள். தமிழின் மேன்மையையும் வீறு கொண்ட தமிழ் நாட்டையும் தமிழர் வாழ்வையும் காண்பதே தங்கள் வாழ்க்கைக் குறிக் கோளாகக் கொண்டவர்கள். வீரராகவன் வழக்கறிஞர்; சிறந்த அறிவாளி; பரந்த உள்ளமும் சீர்திருத்த நோக்கமுங் கொண்டவர்.

பழநியாண்டி தமிழ்த்துடிப்பும் ஆவேசமுங் கொண்டவர் இத் துறையில் அவர் புதுவை யோகி சுத்தானந்த அடிகளாரின் வாரிசு என்று சொல்வது மிகையாகாது. 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்று முற்காலத்தில் திருமூலர் பாடினார். அதையே சற்றுமாற்றி, 'அன்பும் பழமும் இரண்டென்பர் அறிவிலார்' என்று நான் சொன்னால், பழநியாண்டியை நெருக்கமாகத் தெரிந்தவர்கள் என்னை மறுத்துரைக்கமாட்டார்கள். இதில் யாருக் கேனும் ஐயம் தோன்றினால், அவர் தம் பெயரை 'அன்புப்

பழம்' என்றும் 'பழம் நீ' என்றும் எழுதிக்கொள்வதைப் பார்க்கட்டும்.

இவ்விரு இளைஞர்களும் மிக்க துணிச்சலுள்ளவர்கள். ஒரு புது இலக்கியத்துறையில் தைரியமாகக் குதித்திருக்கிறார்கள். ஆனால், ஆழம் தெரியாமல் அல்ல.

நானும் யோசித்துப் பார்த்தேன். இத்தகைய ஒரு இலக்கியவிமரிசனம் (Literary criticism) மேலை நாடுகளில் கூடக் காண்பது அரிது. தமிழனுக்கே உரிய கற்பனை ஊற்று வற்றிப் போகவில்லை என்று கண்டு இறும்பூதெய்துகிறேன்.

இது பத்திரிகை யுகம். புத்தகக் காலம். நாளொரு பத்திரிகையும் பொழுதொரு புத்தகமுமாக வெளிவந்து குவிகின்றன. பேனா பிடித்தவர்களெல்லாம் எழுத்தாளர்களாகிவிடுகிறார்கள். இந்த நிலையில் தமிழ் படிப்பவர்கள் பாடு சங்கடமாகி விடுகிறது. எதைப் படிப்பது எதைத் தள்ளுவது,எது மாணிக்கம் எது குப்பை என்று தெரியாமல் அவர்கள் திண்டாடுகிறார்கள். கண்டதை யெல்லாம் படித்து மூளையைக் குழப்பி, மனத்தை மாசு படுத்திக் கொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்ட இடரான நிலையிலே, 'எழுத்தாளர்களில் முன்னணியில் நிற்பவர்கள் யார்? யார் எழுதுவதைப் படிக்கலாம்? அந்த ஒரு சிலரிடையேயும் காணப்படும் குணதோஷங்கள் யாவை? என்பனவாதியவற்றை அந்த எழுத்தாளர்களுக்கும் மனம் நோகாமல், வாழைப்பழத்தில் ஊசி யிறக்குவதுபோல பொது மக்களுக்குப் புலப்படுத்துவதே இதுபோன்ற நூல்கள் செய்யும் பணியாகும். இந்த வகையில் இத்தகைய நூல்களின் இன்றியமையாமை நன்கு விளங்கும்.

இது போன்ற நூல்கள் எழுதுவதற்கு நடைமுதல் இலக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிய பரந்த அறிவும், எந்நேரமும் விழிப்பாயுள்ள மனநிலையும், உயர்தர நகைச்சுவையும், ஆள்களையும் கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து தராசில் வைத்து எடை போட்டுக்காட்டும் வன்மையும் வேண்டற்பாலன. இக் குணவிசேஷங்களை இந்த நவீன இரட்டையர்கள் நிரம்பப் பெற்றிருக்கிறார்கள் என்பது, இந்நூலை மேற் போக்காகப் படிப்பவர்களுக்குக் கூட நன்கு புலனாகும்.

இக் கடிதங்கள் சிலரைச் சுறுக்கென்று தாக்குகின்றன; சிலரைச் சவாலுக் கழைக்கின்றன; சிலருக்கு அறவுரை பகர்கின்றன; சிலருக்கு ஸிந்தாஸ்துதி பாடுகின்றன; சிலரோடு கொஞ்சிக் குலாவுகின்றன; சிலரை வெளிப்படையாகவே புகழ்கின்றன. இப்படி எத்தனையோ விதம். ஆனால், எல்லாவற்றிற்கும் அடிப்படையில் அன்பு மிளிர்கிறது. அதுவொன்றே இந் நூலை எல்லாருக்கும் உவப்பாகச்செய்கிறது. இவ்வொரு காரணத்தினாலேயே, இக் கடிதங்களைப் படிக்கும் போது ஓர் அலாதியான இன்பச் சுவை தோன்றுகிறது

இவ்விரு தமிழ் வீரர்களின் அம்புக்குறியிலிருந்து முதியோர் தப்பவில்லை; அரசியல் வாதிகள் தப்பவில்லை; பட்டாதாரிகள் தப்பவில்லை; செல்வந்தர்கள் தப்பவில்லை; துறவிகள் தப்பவில்லை; ஆஹா! பெண்மணிகள் கூடத் தப்பவில்லை!

புதிய ஓர் இலக்கியத்துறையில் முதலில் வெளிவரும் நூலாகையால், இதில் பல குறைகள் இருப்பது இயல்பு. எடுத்துக்காட்டாக, கடிதம் எழுதப்பெறவேண்டிய தகுதியுள்ள எழுத்தாளர்கள் பலர் இதில் விடுபட்டிருக்கலாம்; இதில் இடம்பெற வேண்டிய அளவுக்கு முதன்மை பெற்றிராதவர்கள் சிலர் இதில் இடம் பெற்றிருக்கலாம். அன்றியும், ஆள்களைப் பற்றியும் நூல்களைப் பற்றியும் இந்த இரட்டையர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் தமிழ் மக்கள் எல்லாருக்கும் ஒப்பமுடிந்தவையென்று சொல்வதற்கில்லை. ஆயினும், இவற்றையெல்லாம் தமிழ்மக்கள் அதிகமாகப் பொருட்படுத்தாது, ஆசிரியர்களின் நல்லெண்ணத்தையே பாராட்ட வேண்டுகிறேன்.

வீரராகவன், பழம்நீ—இவர்களுடைய இலக்கிய முயற்சிக்கு ஆதரவு நல்க வேண்டியது தமிழ் மக்கள் கடன். அந்த ஆதரவு நிரம்பக் கிடைக்குமென்னும் நம்பிக்கையுடையேன்.

வீரராகவன், பழம்நீ வாழ்க! அவர்கள் தமிழார்வம் குன்றாமல் ஓங்குக! அவர்கள் தமிழ்த் திருத்தொண்டு வெல்க!

"பொன்னரங்கம்"
பெத்துநாய்க்கன் பேட்டை,
சென்னை - 19-8-47

வல்லை பாலசுப்பிரமணியம்
சென்னை அரசாங்க உதவித் தமிழ்
மொழி பெயர்ப்பாளர்.



கே. வி. வீரராகவன், B.A, B.L.



அன்புப் பழம் நீ

தமிழரிடையே அன்புப்போர்

1

சென்னை.
15-8-47.

மாசற்ற பெரியார் திரு.வி.க. அவர்கட்கு,

மணிவிழாக் கண்ட மாண்புடைத் தலைவரே, தலைவணங்குகிறோம்.

இணக்கமுடன் வணக்கம் பல. நீவிர் தொழிலாளர் தலைவர்தான்; இருந்தும் தொழிலாளர் படிக்கக்கூடிய நிலையிலும் விலையிலும் ஒரு புத்தகமாவது இயற்ற வில்லையே! காரல் மார்க்ஸையும் கம்ப நாடரையும், நாத்திகத்தையும், நால்வரிசையையும் ஒருங்கே விளங்கவைக்க ஏனோ அரும்பாடு படுகிறீர்; கடைசியில் எல்லோரையும் திருப்தி செய்ய நினைத்தவன் கதை ஆகிவிட்டால்?

அரசியல் புரட்சிமுதல் இன்னிசைச் சர்ச்சை வரையில் உள்ள அனைத்துலகிலும் மாந்தித்திளைக்கும் மாண்பு பெற்ற நீவிர் ஒரேவழி நின்று நிலையாய கொள்கையைத் தலையாய பொருளாய்க்கொண்டு நிற்காது பல திறப்பட்ட கூட்டங்களில் பலப்பல கருத்துக்களைக் கூறுதல், குழப்ப மூட்டுவதை நீவிர் அறியீர் கொல்! கார்ல்மார்க்ஸையும் கம்ப நாடரையும் ஒருங்கேபோற்றி ஒன்றாய்க்கொள்ளும் இயல்பு பயன்படுமெனக் கருதுதல் சரியேயோ!

பெண்ணின் பெருமையைப் பேணிப் புகழ்ந்து போற்றித் தமிழ் இலக்கியத்தில் நிலை நாட்டிய முதன்மை தங்

களுக்கேயாண்டும் யாங்கணும் உரித்தாகும் என்பதில் ஐயப்பாடுமுளதோ! தனித் தமிழ் நடை தழைத் தோங்கச் செய்துள்ள நுமது முதற் பணி தொழி லாளர்க்கு ஆற்றிய தொண்டெனும் கூற்று, வியன் பெற வியக்கச் செய்யும் விடயமே. பேச்சுத் தமிழை ஒட்டியே இலக்கியம் பரவவேண்டும் என்ற கொள்கை பரவிவரும் இற்றை நாளிலும் தாங்கள் இருவகைத் தமிழை கையாண்டு வருதல் தொன்மை தொட்டோ, அன்றிப் பிறி தொரு காரணம் உளதோ?

நாத்திகம் பரப்பும் நாயக்கருக்கும், அரசியல் அரங் கத்தில் அணிவகுத்துச் செல்லும் ஆச்சாரியாருக்கும் ஒருங்கே நண்பரென நெருங்கிப் பழகும் நெறி தங்களுக் குக் கிட்டியுள்ளது. ஆயினும் இன்றைய அரசியல் உல கில் தங்கள் ஆதரவு எவர்க்கென்பது தெளிவுபடக் காண் பது அரிதரிது காண், அம்மம்ம! சமதர்மத்தில் சைவத்தை யும், நம்மாழ்வாரிடத்தில் அபேத வாதத்தையும் காட்டு வதில் தங்கள் புலமையைக் கண்டு பிறர் வியக்கலாம்; ஆயின் உண்மை ஒருவகையாகத்தானே இருத்தல் இயல்பு என்று அறிஞர் ஆராயப்புகுங்கால் நுமது பெருமை மாசுறுவதை அறியீரோ?

நீவிர் சைவப் பெரியார் என்பது தெளிவு, தமிழர் நிலையை உயர்த்த அருந்தொண்டாற்றிய பெருந்தலைவர் என்பது வெள்ளிடை மலை; சமதர்ம நெறியில் நுமது பற் றுக்கோடும் புலனாகின்றதென்பது உண்மை. இக் கொள்கைகளை முறையே வழிவழிப் பரப்புதல் இயலாது கொல்! ஒன்றில் ஒன்று கலந்து குழப்புதல் எற்றுக்கு?

தங்கள் அபிப்பிராயங்களை ஆணித்தரமாக வெட்டு ஒன்று, துண்டிரண்டாக எடுத்தெரியவேண்டுமென்று எங்கள் மனம் அவாவுகின்றது. இதுவே எமது விருப்ப மும் வேண்டுகோளும்! வந்தனம்.

2

மறைத்திரு மறைமலை அடிகளார், அவர்கட்கு

சொல்லிலும் செயலிலும் பெயரிலும் தனித்தமிழ் அன்பு ததும்பும் தகையோய், வணக்கம்.

இமயம்முதல் குமரிவரையில் பண்டும் இன்றும் பரவியிருப்பவர் தமிழரே என்று பறைசாற்றும் தங்கள் தமிழ் மதப்பற்றைப் போற்ற சொல்லால் மட்டும் இயலாது. தமிழரின் தனிமரபைத் தகைமை சான்று, ஆங்கில சரித்திராசிரியர்கள் ஆதாரத்துடன் எடுத்துக் காட்டிய தங்கள் பெருமை ஈடு இணையற்றது. விழாக்கள், சடங்குகள், முதலியவற்றைக் குறித்து தங்கள் கருத்தை ஒப்புக் கொள்ளாதவர்களும், அவற்றின் நுண்மையையும், புதுமையையும் போற்றக் கடமைப் பட்டுள்ளார்கள். பண்டைத் தமிழகத்தின் பெருமையையும் தமிழ்மொழியின் தொன்மையையும், மேன்மையையும் எடுத்து விண்டுரைத்தலில் வழுவொன்றில்லாது வழங்கும் தலைசிறந்த ஆற்றல் தங்கள் பால் காணக்கிடக்கின்றது.

கட்டுரைத்துறையில் சிறந்து விளங்குவதுபோல் பிறதுறைகளிலும் தங்கள் அருமையும் பெருமையும் காணக்கிடக்கின்றன. சாகுந்தலத்தின் மொழி பெயர்ப்பு தாங்கள் தமிழுக்குச் செய்த பெருந்தொண்டாகும். கோகிலாம்பாள கடிதங்கள் மூலம் புதுத்துறையைக் கையாண்டு பெரிதும் வெற்றிபெற்று விட்டீர்கள். ஆங்கிலம், வடமொழி, இந்தி, இன்னோரன்ன பிறமொழிகளில் தங்கள் ஆற்றலும் ஆங்காங்கே மகிழ் வூட்டுகின்றன. பன் மனைவியர் மணம்,ஆங்கில அரசாங்கத்தின் அடிமைத் தனம் முதலிய கீழ்த்தரக்கொள்கைகளை தாங்கள் ஆதரிப்பதுதான் உன்னும் தோறும்,உன்னும் தோறும் சிந்தைக்கு

விந்தையாகத் தோற்றுகிறது. (சிந்தை, விந்தையெல்லாம் தனித் தமிழ் மொழிகள் என்று நிரூபிக்கத்தங்களால் இயலுமன்றோ!)

தங்களைப்பற்றி பெரியார் திரு. வி. க. வின் முறையீட்டை நாங்களும் ஈண்டு எடுத்து இயம்ப விழைகின்றோம்:— "அடிகள் எழுத்தில், ஆரியர் தமிழர் என்ற பிரிவை வளர்க்குங் கருவிகளிருக்கின்றன. அவை மக்களின் ஒருமைப் பாட்டையும், வளர்ச்சியையும் குலைக்குமென்பது என் உட்கிடக்கை. ஒருவன் பன் மனைவியரை மணக்கலாமென்று அடிகள் அறைவது எனது நோக்குக்கு முற்றிலும் முரண்பாடு. ஒருவனுக்கு ஒருத்தி. ஒருத்திக்கு ஒருவன் என்பது என் கொள்கை." தமிழகமெங்கும் தமிழ் முறையைப் பின்பற்றி வாழ்பவர் எக்குலத்தவராயினும் தமிழர் எனக்கொள்ளுதல் தக்கதென என்னுகிறோம். ஒரு சிலர் இன்று வடநாட்டு மரபிலும் வகையிலும் வாழ்ந்து வந்தால் அவர்களைத் திருத்தி அமைத்தல் ஒழுங்கேயன்றி, வெறுத்து இகழல் வேற்றுமை உணர்ச்சிக்கு அடிகோலி வேண்டாத பலன்களை அளிக்கும் என அஞ்சுகிறோம்.

தமிழரைத் தனிப்படுத்த முயற்சிக்கும் தாங்கள் திருக்கோயில்கள், மடங்கள் முதலியவற்றின் பழமையை மட்டும் விடாது கைப்பற்றுதல் புதிய சீர் திருத்தக்காரர்களுக்கு பெரிதும் இன்னல் தருவதாகும். தங்கள் கொள்கைகளை முழுமையும் ஒத்துக்கொள்ளக் கூடியவர்கள் தமிழ் நாட்டில் தங்களைப்போற்றிப் புகழ்பவர்களிடையேயும் அதிகம் இரார்.

பிரிட்டிஷ் சர்க்காருக்கு தாசர்; ஆரிய திராவிட பாகுபாட்டுக்கு அடிகோலிய அறிஞர்; பிறமொழிக் கலப்பை அறவே வெறுப்பவர்; பன் மனைவியர் மணம் போன்ற பிற்போக்குக் கொள்கைக்கு ஆதரவளிப்பவர்; சீர்திருத்தக்காரர்களையும் எள்ளி நகையாடுபவர்—இத்

தகைய நிலையில் தங்களைத் தமிழ்நாடு அல்லது தமிழர் பின்பற்ற இயலுமா? ஆக தங்கள் சாலச்சிறந்த காணக் கிடைக்காத உயர்ந்த அறிவுத்திறன் இங்ஙனம் விழலுக் கிறைத்த நீராக மாறவேண்டுமா, என்பதையே எண்ணி எண்ணி ஏங்குகிறோம். கடைசியாக அச்சத்துடன் ஒன்று வினவ விழைகிறோம்:— தங்கள் அறிவுச்சுடர் தமிழ் நாட்டுக்குத் தக்க பயன்தரவேண்டுமானால் தமிழோசை செழிக்க, தமிழர் உயர, தங்களால் இயன்ற தொண் டாற்ற தங்கள் பேச்சை இன்று தமிழ் நாட்டார் விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலையில் இருப்பது தங்களுக் குள்ள பெருந்தத இழுக்கெனக் கருதுகிறோம். தங்களையும் தமிழ் நாட்டையும் ஒருங்கே தாழ்த்தும் இந்தப் பழக் கத்தைத் தாங்கள் விடவேண்டும் என்று தமிழர் சார்பில் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

3

தமிழ் நாட்டின் தவச்சுடர் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கட்கு

உலகைத்திரட்டித் தமிழுக்களிக்கும் உத்தமரே,

எனது நண்பர் அன்புப் 'பழம் நீ' தாங்கள் கீறிய கீற்றை மீறாத சிஷ்யராதலால் இக்கடிதத்தின் பொருப் பைமட்டும் தனிப்பட நானே ஏற்று எழுத விரும்பு கிறேன்.

சீரிய செஞ்சொற் திறமைகொண்டு வேறுபட்ட பல துறைகளில் தமிழ்ப்புத்தகங்கள் மலை மலையாய்க் குவித்து விட்டீர். ஆதலால், அனைத்தையும் படிப்பதுகூட அரிய காரியம் ஆகிவிடுகின்றது. ஆகவே அத்தனை புத்தகங் களையும் எழுதிய பணி எண்ணுந்தோறும் வியந்து பாராட்டக்கூடிய விஷயமே.

ஆயின், அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகு மன்றோ? விஞ்ஞானம், அரசியல், இலக்கியம், மொழிச் சர்ச்சை, சரித்திரம், பாடல், நாடகம், காவியம் முதலிய பல துறைகளில் ஒருவரே எழுதுவதென்றால், திறம்பட எழுதியபோதும், மக்களுக்குச் சலிப்புத்தட்டி விடுமன்றோ? "Jack of all trades is master of none" என்று தங்களைக் கூறிவிடப்போகிறார்களோ; என்று நான் அஞ்சுகிறேன். ஏனெனில் சில துறைகளில் ஈடு இணை யற்ற புத்தகங்கள் எழுதியிருப்பதை நான் கண்டு களித் துள்ளவன்.

தங்கள் பெயர் தமிழரின் வீர சரித்திரத்துக்குச் சரியான சான்று; பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரத்தைத் தமிழருக்கு அறிவுறுத்துவதில் அபாரமான ஆராய்ச்சித் திறனுக்கு நிலைக்களன்; தமிழர் நலத்தை எண்டிசையும் பரப்ப ஆங்கிலத்தில் அறைகூவி அழைக்கும் அழகுடை யது; ஆயினும், எழுதினதெல்லாம் புத்தகமல்ல என்பத தற்கும், தங்களிடமும் சான்றுகள் தோன்றியுள்ளன.

மேலும், பெயர்பரவும் நோக்கம் ஒன்றே கொண்ட வரோ என்னும்படி கண்ட கண்ட பத்திரிகைக் குவியலிலும் தங்கள் கட்டுரைகள் காணக்கிடக்கிறது. எங்கு விழாவென்றாலும் தங்கள் வாழ்த்து தங்கு தடை யின்றி வந்து விடுகின்றது. இசைவாணிகள் கச்சேரிகளுக் கும் விளம்பரமளிக்கும் வரையில் தங்கள் கட்டுரைகள் சிலசமயம் தாழ்ந்து விடுகின்றன.

தாங்கள் எழுதும் பாடல்கள் பலப்பல. அனைத்தும் அமரத்தன்மைபெற அருகதை யுள்ளதென்று எப்படிக் கூறமுடியும்! தாங்களே பரிசீலனை செய்து அரும்பெரும் பாடல்களைத் திரட்டி தனிப்பதிப்பொன்று வெளியிடுதல் கூட நலமெனத் தோன்றுகிறது. மேலும் தமிழில் மட்டு மின்றி, தமிழின் பெருமையைப் பிறரும் அறியும்படிச் செய்தல் பெரும்பணி. ''பிறநாட்டு நல்லறிஞர்'' பேரு

ரையைத் தமிழில் மொழி பெயர்த்தலும் உயரியபணி. தங்கள் மோனத்தைப்பற்றி ஒரு வார்ததை. மோனத்தி லிருந்து தமிழ் இலக்கியத் தொண்டு புரிவது நன்று. ஆத்மீக விஷயங்களை அளந்து கூற நான் அருகதை யற்ற வன். ஆயினும், தாங்கள் தமிழருக்குக் கிடைக்கக்கூடிய, கிடைக்கவேண்டிய தங்கள் அரும் பெரும் சிந்தனைச் செறிவை எழுத்தில் மட்டுமின்றிப் பேச்சிலும் வழங்கி ஞல் தமிழ்நாடு பெரிதும் பயனெய்தும் என்பது எனது தாழ்மையான அபிப்ராயம். இதைவிட்டு புதுவையில் தன்னந்தனி வாழ்வு நடாத்துதல் நாட்டின் தற்கால நிலை யில் வேண்டியதொரு பணியை மறுத்தலாகும் என்று நான் துணிவுடன் கூறுவேன். ஆகவே, இனி காணக் கிடைக்கும் புது யுகத்திலேனும் தங்கள் சொற் செல் வத்தை நேரில் கேட்டு இன்புறலாமென நினைக்கிறேன். வந்தனம். அன்பு. அன்பு. அன்பு.

அன்புள்ள,
கே. வி. வீரராகவன்.

4

புலவர்மணி

S. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.,

செந்தமிழின் சீரும் சிறப்புமே போற்றும் ஆற்றல் மீக்கூர்ந்து நாடோறும் தண்டமிழரின் நலமே நாடும் நனி சிறந்த நற்றமிழ்ப் பெரியோய்!

நும் பொன்னடிப் போற்றுதும்! "அந்த ரயில் மதுரைக்குச் சென்றது" என்று நாம் எழுதும் தமிழை "ஆங்குப்போந்த நீராவித்தொடர் வண்டி—நான் மாடக் கூடலினை நணுகிற்று" என்று கூறும் பேராற்றல் தமிழ்ப் பேராசிரியர்களுக்குள் தங்களுக்கே வாய்த்த பேரியல்பாய் அமைந்தது கண்டு, தங்கள் நூல் நயங்களை நவில்தொறும்

நவில்தொறும் கருத்தறியாதொழியினும், நடையொன்று கருதியே வியக்கும் மனப்பான்மை எம்மனோரில் பரவி யுள்ளது. ஆயினும் தாங்களே எளிமையை வியந்து ஒரு நூலுக்கு "இது இனிமையோடு எளிதில் தெளிவினுத லும் ஆசிரியர் கருத்தை இனிது வெளிப்படுத்துகின்றது" என்ற மதிப்புரை அளித்திருப்பது கண்டு, தாங்களும் எளிமையையும், இனிமையையும் விழைகின்றீர்கள் எனப் புலப்படுகின்றது. இருப்பினும் இயற்கையே கடுமையையும் கருந்தமிழையும் தங்களுக்கு அளித்து விட்டதோ! என்றுதான் ஐயுறவேண்டியிருக்கிறது. அது இயற்கையாயினும் சிறிதே வருந்து முயன்று "பூசையைப் புடைத்தான்" என்பதை பூனையை அடித்தான் என்று மாற்றி நும் தமிழை எம்மனோரின் எளிய நிலைக்குத் தக்க வாறு தாழ்த்துதல் பல்லோருக்கும் நனிபேருவகை தரும் என்பதில் யாதொரு ஐயமுமின்று. ஆயின் தங்கள் விடுதலைப்பற்றும் தனித்தமிழ் பற்றும் போற்றற் பாலது என்பதை யாதொரு மாசுமருவின்றி ஒப்புக்கொள்ளு கிறோம். விடுதலை இயக்கத்தில் உழைத்ததற்காகமட்டு மின்றி தனி வாழ்க்கையிலும் புறநலங்களிடைப்போராடி தமிழன் தலை நிமிர்ந்து நிற்க ஆவனச் செய்துள்ள நுமது பேராற்றல் போற்றப் போற்றமாளாது. அதிலும் பேயத்தைப் பொருது அதன் கூண்டிலே தூண்டி விடுவது போன்று தனித் தமிழர் என்று மார் தட்டும் கட்சியின ருக்கு அவர்களது பெயரே வட மொழி அடிப்படை கொண்டு விளங்கினதை எடுத்துக் காட்டின பெருமை நுமதேயன்றோ? இனியாகிலும் சுய மரியாதைக் கட்சி 'தன்மானக்கட்சி' யென்றே விளங்கி வருமா?

நும்போன்ற பேராசிரியர்களுக்கு வழிகள் கூறவோ வேண்டுகோள் விடுக்கவோ நாங்கள் யாங்கணும் அரு கதையற்றவர்கள் எனினும், தமிழ்ப் பெரியார்கள் யாவரையும் தமிழ் உலகத்துக்கு அறிமுகப்படுத்துதல்

வேண்டுமென்ற பேரவா ஒன்றே எங்களை உந்தித் தள்ளுகின்றது. அதன்பொருட்டே இச்சிறு வேண்டுகோளை நீவிர் செவி மடுத்தல் வேண்டுமென விழைகின்றோம். அரியாசனத்திலிருந்து அறைகூவும் தமிழைச் சிறிதே விட்டு, எளியோரும் இனிதே கற்க வல்ல இனிய தமிழ் எழுத முற்படுங்கள். தங்களுக்கும் நாட்டுக்கும் நலனுண்டு. மிகைபடக்கூறல் வேண்டுமோ? புலவரேறுக்குப் புலப் படாத உண்மை உண்டுகொல்!

5

மகாமகோபாத்யாய

பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்

இமிழ் கடல் வரைப்பில் இனிமை சான்ற தமிழ் மொழி போற்றுதல் தன் கடனெனக் கொண்ட தகையோய்,

'ஒருமைக்கட் பயிற்சியால் எழுமைக் கண்ணும் தொடரும் இயல்பினதாகிய கல்வியில் பன்மொழி நலனும் மாந்திப் பெரும்பேறு பெற்றுள்ளீர். வடமொழியிலும் தமிழ் மொழியிலும் தங்கள் புலமை பல நூல்களின் வாயிலாகவும் புலனுவது தமிழருக்கு நல்விருந்தாகும். உதயணன் போன்ற உயரிய வடமொழி காவியத்தைச் சீரிய செந்தமிழில் அருளித் தமிழ் இலக்கியத்தின் தகைமையை அரசாங்கத்தாரும் அறிந்து பட்டம் நல்கியது தமிழர் தங்களை நன்குணர்ந்ததற்கு அறிகுறியாகும். தங்கள் கட்டுரைகளின் கருத்துச் செறிவையும், புத்தகங்களின் உயர்வையும் எடுத்து இயம்ப எம்மனோரால் இயலும் கொல்! ஆயின், இலக்கணக் கலக்கங்களில் மயக்குண்டு நேரிய எளிய முறைகளைக் கைவிட்டு அங்ஙங்கே தங்கள் நடை தடைபட்டுச் செல்வது போல் தோன்றுகின்றது.

எளிய நடையிலும் எழுதவல்லவர் நீவிர் என்பதற்கு தங்கள் நடையில் பல சான்றுகள் காணப்படுகின்றன. தமிழின் எதிர் காலத்தை எண்ணுங்கால் இவ்வெளிமையைக் கோடல் தங்களுக்கும் நலம்—தமிழுக்கும் வளம் என்பது எங்கள் தாழ்ந்த யோசனை.

6

திருவாளர் S. வையாபுரிப்பிள்ளை B. A., B. L. அவர்கட்கு

அறிவும் ஆற்றலும் ஆராய்ச்சியும் ஒருங்கே படைத்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் அணிகலனாய் விளங்கிய தமிழ்ப் பெரியீர்,

ஆங்கிலத்திலே Dr. Jekyell and Mr. Hyde என்ற கதையில் வரும் கற்பனைத் தலைவன் போல் தாங்கள் 2 அடியோடு மாறுபட்ட வேஷத்தில் தமிழுலகில் உலாவிவருகின்றீர்கள். பண்டைத்தமிழின் ஆராய்ச்சியையும், தமிழ் வளர்ந்த கதையையும் தமிழ்ச்சொற்களின் திறத்தையும் தாங்கள் விளக்கிக் கூறும்போது தங்களை வியந்து பாராட்டாமல் வேறொன்றும் செய்வதற்கில்லை. ஆயினும் சிறு கதைக்கும், பத்திரிகைத் தமிழுக்கும் தாங்கள் இறங்கிவரும்போது தங்களுக்கு அனுதாபம் காட்டுவதா, அல்லது இது ஒரு தனிப்போக்கு என்று கொள்ளுவதா என்று எங்களுக்கு விளங்கவில்லை. பாலையா என்ற பெயரில் சில கதைகள் வெளியிட்டிருப்பதால் இந்தப் போக்கு ஒருவாறு மறைந்து காணலாம். ஆனால் உண்மையை உலகத்தாரிடமிருந்து பல நாளைக்கு மறைக்க முடியாது. மேலும் தங்கள் பெயரிலும் மற்றொருவரோடு சேர்ந்தும் பலகதைகள் தாங்களே வெளியிட்டிருக்கிறீர்கள். இவற்றை நோக்கும் போது தங்களை அந்

தணர் தமிழ் எழுதும் அன்பரே என்று மதிப்பிடவேண்டி யிருக்கிறது. இத்தகைய மாறுதலுக்கு என்ன காரண மிருந்தாலும் இதை மாற்றினால் நலம், அல்லது ஆராய்ச்சி யுடனே தங்கள் தமிழ்த்திறன் நின்று விட்டாலும், தங் கள் தமிழ்த் தொண்டின் மதிப்பு குறைந்து விடாது என் பது எங்கள் துணிபு. எண்ணியதை துணிந்து கூறிவிட் டோம். அதன் பின் உங்கள்பாடு. "ஊரும் பேரும், உள்ளும் புறமும் நன்று" - என யோகி சுத்தானந்தரே பாராட்டியிருக்க-அந்த அரியநூலைத் தாங்கள் குறைகூறு வது விந்தையினும் விந்தையே! "ஊரும் பேரும்" - புத்த கத்தைத் தமிழன்பர்கள் அள்ளிக்கொண்டு போகிறார்கள்.

7

சொல்லின் செல்வர்

ரா.பி சேதுப்பிள்ளை, B.A., B.L. அவர்கட்கு

கம்பரின் கவினுறு காவியமும்; இளங்கோவின் இணையற்ற இனிமையும்; வள்ளுவரின் வழுவற்ற வலிமை யும்; வானோங்கி வளரும் தமிழ் நாட்டில் பிறந்த சிறந்த சொல்லின் செல்வரே,

மேடையில் கோடை யிடிப் பொழிந்தும், புத்தகங் களில் முத்தமிழை முழக்கியும், பண்டு முதல் தமிழ்த் தொண்டு செய்து வரும் அருமையை அனைத்துலகும் அறி யும். தமிழுலகும் தங்கள் பேச்சென்றால் தட்டுத்தடை யின்றி எட்டுத்திக்கும் சுற்றிக்கேட்க விரும்புகிறது. கிரு ஸ்தவ மண்டபத்திலும், சிவஸ்தலவாயில்களிலும் தங் கள் 'வேலும் வில்லும்' ஓங்காரத்தை ரீங்காரம் செய் கின்றன.

எதுகை மோனைக் கொண்ட தங்கள் தமிழ்ப் படிப்பதில் சலிப்புத்தட்டாமல், கேட்பதில் அலுப்புத் தராமல் செல் லுகின்ற தென்பது தெளிவு. ஆயின் சிற்சில சமயம்

எதுகை மோனைகளுக்காகவே தங்கள் நடை தடையுறு கின்றதோ என்ற ஐயம் பலருக்கிருக்கின்றது. சென்னை மாநகர் எங்கும் செந்தமிழைப் புகுத்திய பெருமை உமதே ஆயினும், எதுகை மோனைகளில் நீங்கள் இங்ஙனம் தயக்கமின்றி மயக்கமுறும் காரணம் தான் யாது ?

தங்கள் தமிழ்த் திருத்தொண்டெல்லாம் பழந்தமிழை விண்டு காட்டுவதில் தான் செல்லவேண்டுமா என்பது சிந்தனைக்குரிய விஷயம். தமிழில் புது யுகம் பிறந்திருக் கும் இன்று "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசிப்பயனில்லை." வைரத்த பிழருக்கு புதுத்துறைகளில் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் தங்களைப்போன்ற சான் றோர் செய்ய வேண்டிய சேவை யன்றோ! எதிர் காலத் துக்கு வீரமும் வேண்டும், விறு விறுப்பும் வேண்டும். ஏன்? புதுமையும் வேண்டும். இவற்றில் முன்னேற் றம் தோன்றும்படி செய்தல் தங்களுக்குத் தக்கபணி என் பது எங்கள் தாழ்மையான எண்ணம். பாரதியாரைக் குறித்து குவிந்துள்ள அளவற்ற தமிழிலக்கியத்தில் தங் கள் எழுத்து இடம் பெருதது விந்தையினும் விந்தையே!

"தமிழர் வீரம்"-கண்டு எங்கள் மனவண்டு களிதுள்ளு கிறது

தமிழருக்குச் சொந்தமான மணிமண்டப மொன்று விரைவில் கட்டப்பெறும். அங்கே திருவள்ளுவர் காற்றை விசுங்கள், சிலம்புச் செல்வத்தை வாரியிறையுங்கள்.

கம்பச் சுவையில் தோய்ந்து கம்பக் குயிலோசையை முழக்குங்கள். சூரனைச் சுட்டவனும்; திரிசூலிக் கனல் மகனும்; ஜெயவீர சிகாமணியாம் குன்று தோறுடும் குமரனருள் இருக்க தங்களுக் கென்னகுறை?

அன்பு வாழ்க.

8

சர். சி. பி. இராமஸ்வாமி ஐயர்

அசகாயசூரரே,

ராஜ்யங்களையும், சாம்ராஜ்யங்களையும் ஆட்டிவைக்கும் தங்களுக்குத் தமிழ் எந்த மூலை? ஆனால் "நானும் தமிழன், தமிழ்த்தொண்டு செய்வேன்" என்று முற்படும் பொழுது நாங்கள் ஒருவார்த்தை கூறவேண்டியிருக்கிறது. "ஆணியும் கோணியும தமிழல்ல—வடமொழியே" என்று நீங்கள் சாதித்து விடலாம். ஆனால் வடமொழிசொல் என்ற ஒரே காரணத்துக்காக தமிழன் எதையும் விலக்குவதில்லை, என்பதை நாங்கள் கூற விரும்புகிறோம், ஆம் தனித்தமிழன் கூடத்தான். விண்ணுலகுக்கேகிய தங்கள் நண்பர் சாஸ்திரியார் தமிழில் எழுதியும் பேசியும் வந்தார். ஆனால் தாங்கள் தமிழ்ச் சங்கத்திலும் ஆங்கிலத்தில் அடித்துத் தள்ளுகின்றீர்? இது தமிழன் தலை நிமிர்ந்து பாராட்டக்கூடிய செய்தியா? தப்பும் தவறுமானாலும் தாய்மொழியில் பேசுவதின் தனிப்பெருமை, ஆங்கிலத்தில் அளந்து கொட்டினாலும் வருமா என்பதை சிந்தியுங்கள்.

ஆங்கிலத்தில் தங்கள் பேராற்றலையும், பிரசங்க வன்மையையும் கண்டு வியக்கும் பல்லோருக்கு நாமும் பின்வாங்கினவர்களல்ல! ஆயினும் தமிழில் தாங்கள் எழுத முற்படும் போது ஆங்கிலத்துக்குச் செலுத்தும் அளவற்ற கவனம் மறந்து போவதின் காரண மென்ன? நம்முடைய தமிழ்தானே! என்ற நோக்கமா? அல்லது தமிழர்களுக்கு இது போதும் என்ற மனப்பான்மையா? வடமொழித் தொடர்களும், சுலோகங்களும் எடுத்தாளாமல் எழுதிய தமிழ் கட்டுரைகள் தங்கள் தமிழில் காண்பது அரிதாயிருப்பது ஏன்? ஆங்கில இலக்கியத்தில் ஆங்காங்கே தங்களுக்கு எடுத்தாள விஷயம் அகப்படுவது

போல் தமிழ் இலக்கியத்தில் கிடையாதா? அல்லது தமிழரிடையே வடமொழியும் பரவவேண்டும் என்பது தங்கள் நோக்கமா? அறிய ஆவல்-வந்தனம்.

9

சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார்

ஆங்கில மோகத்திலும் கன்னித்தமிழை மறக்காத அன்பரே,

உத்தியோக உயர்வுக்கும், ஏகாதிபத்தியப் பணிக்கும் இடையில் திடீரெனத் தமிழ் உலகில் புகுந்து ஒரு கலக்குக் கலக்கி விட்டீர். தமிழ் இசைக்கு தாங்கள் செய்த தொண்டு அரும் பெரும் தொண்டாகும். தாங்கள் தலைப் பட்டதுபோல், ஆங்கில வாழ்விலேயே ஐக்கியமாய்விட்ட பலர் ஆங்காங்கே தங்களைப்போன்று தமிழ் சொற்பொழிவுகள் ஆற்ற முன் வந்தால் நலமாகும்,

தமிழில் தங்கள் அன்பைக் காட்ட ஒரு பத்திரிகையின் கௌரவ ஆசிரியராக இருப்பதோடு மட்டுமல்லாமல் சிலப்பதிகார உரை ஒன்று எழுதி வருவதும் சாலச்சிறந்ததே. ஆனால் தமிழ் இலக்கியம் வளம்பெற, உண்மையில் தொண்டு புரிய வேண்டுமென்றால் பழங்காப்பியத்தைப் பாட்டும் வசனமுமாய் எடுத்து எழுதுவது மட்டும்போதாது. தாங்களே வழி காட்டியுள்ளது போல் பொருளாதாரத்துறையில் எளிதில் புரியும்படி எவ்வளவோ விஷயங்களைப்பற்றி ஏன் எடுத்து எழுதக்கூடாது? தனித் தமிழர் கட்சியைத் தாங்கள் எதிர்த்து நிற்பதும் நன்றே! ஆயின் நண்பர் டி. கே. சிக்கும் தங்களுக்கும் எவ்விஷயத்தில் பொருத்த மிருந்து இருவரும் கௌரவ ஆசிரியர்களாய் இருந்து வருகிறீர்கள் என்பதுதான் எண்ண எண்ணப்புலனாக வில்லை.

தங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் தமிழில் ஊக்கங்கொள்வது தமிழர்களுடைய பாக்கியமே. ஆயின் தமிழ்த்தொண்டை தங்கள் உயர்வுக்குத்தூண்டுகோலாக்காமல் தமிழரிடையே ஒன்றி வாழ்வதற்கு ஊன்றுகோலாக்கினால் நன்று. தங்கள் புதிய உத்தியோகத்துக்கு எங்கள் பாராட்டு உரியது.

10

திரு. ச. இராஜகோபாலாச்சாரியார் அவர்கட்கு

அரசியல் அறிஞரே,

அரசியல் உலகில் தங்கள் சாமர்த்தியம் சாணக்கியத்தை வென்று பெயர் பெற்றுவிட்டது. தங்களை எதிர்ப்பவர்களும் தங்களுக்குத் தக்க மரியாதை அளிக்க தயாராக இருக்கிறார்கள். தங்களது அபாரமான சமயோசித புத்தியும் பிறர் பக்குவத்தைக்காணும் நுண்ணறிவும் எண்ண வியப்பை அளிக்கிறது. நாஸ்திகத்தை நாள்தோறும் போற்றும் திரு ஈ.வே. ராவும், பெரிய புராணத்திலும், முருகன் எழிலிலும் என்றென்றும் குளித்துத் திளைக்கும் தெய்வத் திரு. வி. க. வும் தங்கள் அரிய நண்பர்கள்; தற்காலத்தில் கட்சி வேறுபாட்டால் தங்கள் பெயர் சிறிது குன்றிய போதிலும் மகாத்மாவின் அருளும் ஆசியும் உள்ளவரை தங்களுக்கென்ன குறை?

அரசியல் உலகத்தைப்பற்றி அதிகக் கவலை யுறுதல் எங்கள் நோக்கம் அல்ல. இலக்கிய உலகில் தங்கள் தொண்டு எத்தகையது என்று ஆராய்ந்தறிவதே எங்கள் நோக்கம். குட்டிக் கதைகள் ஒன்றைத்தவிர, தாங்கள் எழுதியுள்ளவை எல்லாம் சமயப் பிரசாரம்தான். கீதையைக் கண்ணன் காட்டிய வழியாக்கினீர். உபநிஷத்தை ஒரு பலகணி ஆக்கினீர். ஹிந்து மதசாரத்தைப் பிழிந்து

இரண்டணுவுகருத் தந்தீர். வேதாந்தத்தை அச்சமில்லை என்ற பெயரில் வெளியிட்டுள்ளீர். வியாசர் விருந்தை தங்கள் நண்பருக்கு விஷயதானம் அளித்தீர். பத்து ரூபாய்ப் புத்தகமுமாக்கித் தமிழனைத் திகைக்கவைத்தீர். இவையெல்லாம் இன்றைய தமிழ் நாட்டின் அவசியத் தேவைகளா? அறிவியல் துறை, மொழிவளர்ச்சி இவற்றிற் குறிய தொண்டுகள் அங்கங்கே ஆரம்பித்து அப்படியே விட்டுவிட்டதன் காரண மென்ன? இந்தப் பழம் புராணங்களைவிட "தாவரங்களின் இல்லறம்" எவ்வளவோ சிறப்புற்றது எனக் கூறலாம். ஆனால் அங்கும் அந்த உபநிஷத்தின் உதாரணம்தான் தங்களுக்குத் தோன்றுகிறது போலும். உதாரணங்கள் என்றதும் உடனே தங்கள் அழகிய அரசியல் பிரசங்க உபமானங்கள் நினைவுக்கு வருகின்றன. சந்தர்ப்பத்துக்குத் தகுந்ததாக இல்லாமற் போனாலும் தங்கள் உபமானங்கள் அழகானவை என்பதில் ஐயமில்லை! இலக்கியத்தில் அவை ஏனோ இடம் பெறவில்லை? வங்கத்தை அன்று ஓட்டைபடகாக்கி அதன் பலனைத் தாங்களே இன்று கண்டு அனுபவிக்குமாறு நேர்ந்ததுபோல் தங்கள் உபமானத்துக்கும் இலக்கியத்திலேயே இடம் கிடைக்கலாகாது என்று ஏதாவது சாபமா?

தங்கள் சாமர்த்தியம் தமிழ் இலக்கியத்திலே புதுமைக்கு பயன்பட வேண்டும் என்பதே எங்கள் பேரவா. பழைமையைப் போற்றிப் புகழ்ந்து கோவிந்தா போடும் கும்பலில் இன்று தாங்கள் தலைமை வகிக்கிறீர்கள். இந்த நிலை ஒழிந்து புதுமைத் தமிழுக்குத் தங்கள் பொன்மொழிகள் பயன்படுமாக. நன்று.

11

திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார், B.A.B.L. அவர்களுக்கு.

"கம்பர் யார்?" என்று உலகிற்கு அறிமுகம் செய்ய முதலில் முன்வந்த ரசிக சிகாமணியே! தமிழ் நாட்டில் ஆங்கிலயோகம் முற்றியிருந்த காலத்தில், பண்டிதத் தமிழ்மட்டும் பரவிவந்து படித்தவரிடையே தமிழ் என்ருல் பயப்படுத்திய காலத்தில், தாங்கள் இலக்கிய உலகில் வந்து கம்பரை படித்தவரும் பாமரரும் ஒருங்கே அறியும் படி தொண்டு செய்ய முன்வந்தது பாராட்டத்தக்கதே. ஆயின், கம்பரை அறிமுகப்படுத்த, அவர் கவிதையை சந்தி பிரித்து தந்தால் மட்டும் போதும் என்ற தங்கள் எண்ணம் எவ்வளவு தூரம் பலிக்கும்? "இதுதான் கம்பர் பாட்டு"—"இதைக் கம்பர் பாடி யிருக்க முடியாது" என்றெல்லாம் பாகுபாடுகள் செய்து புலவர் குழாத்தின் வெறுப்புக்கு உள்ளாகி விட்டீர்கள்; அதற்காகத் தங்களை நாங்கள் குறைகூற முன்வரவில்லை. ஆனுல் "இந்தப்பாட்டு கம்பர் பாடியிருக்க முடியாது" என்று கூறும் பொழுது தாங்கள் அப்படி நினைப்பதற்கான காரணங்களையும் எடுத்துக் கூறினுல் புலவர் குழாத்தின் சச்சரவுகளை அறியாத எங்களையொத்த எளியவர்களுக்கு நன்ருயிருக்கும். இலக்கணத்தை வெறுப்பதில் அன்பர் வ. ரா. வுக்கு அடுத்தபடி தாங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள். ஆனுல் தங்கள் நண்பர் வ. ரா. சந்திபோட வேண்டிய இடத்திலேயே விட்டு விடுகிருர். தாங்களோ ' ல். ப்.' போட்டு எங்களைத் திணற அடிக்கிறீர்கள்; கம்பச்சுவையையும், தமிழ்அன்டையும் தாய்ப்பால்ப் போட்டுவதுபோல் தாங்கள் பலர்க்கும் உரைக்கின்றீர்கள். கம்பர் கவியில் நுழைந்த போலிகளை வெருட்டுகிறீர்கள்; ஆனுல், கம்பர்

கனவிலும் காணக்கூடாத அந்த 'ல். ப்.' பை அவர் தலையி லும் சுமத்திவிடுகிறீர்கள்! தமிழிசையை ஆதரிப்பது நலமே; ஆனால் உபமானம் போடுவதை ராஜாஜிக்கே விட்டுவிட்டால் நலம். 'இதய ஒலி'யில் கச்சேரி கேட்ட பிரபு பிச்சைக்காரியின் பாட்டை ரசிப்பதாக அல்லவோ கூறுகிறீர்! இதை ரஸிக்க எங்களால் இயலவில்லையே!

கம்பர் தரும் காட்சியென்று, கம்பர் பாடல்களை அப் படியே பாட்டாகவும், வசனமாகவும் எடுத்து எழுதிவரு வது கம்பருக்கோ அல்லது தமிழுக்கோ செய்யும் சிறந்த தொண்டாகுமா என்பது சந்தேகம்தான். தாங்கள் திருத் திய கம்பர் பதிப்பு உருவத்தில் சிறிதானாலும் விலையில் மலிவில்லா திருப்பது எளியோரும் படித்து கம்பச் சுவையை, உயர்ந்த சுவையாக இல்லாமல் சாதாரணமான தாய்ச் செய்துவிடப்போகிறார்களே என்ற ஐயத்தினாலோ?

எது எப்படி யிருந்தாலும் தங்களைப்பற்றித் தூற்றி யும் போற்றியும் புத்தகங்கள் வெளிவந்துவிட்டன, இலக் கியத்தில் இப்படி சர்ச்சையைக் கிளப்பிவிட்ட தாங்கள் இலக்கியப்பணியில், கவிதை; மதிப்புரை தவிர வேறொன் றும் (இதய ஒலி கட்டுரை நீங்கலாக) செய்யாதிருப்பது விந்தையினும் விந்தையே!

மேலும் தங்களை சும்மாவாவது புகழ்ந்துக் கொண்டே இருக்கும் ஒரு கூட்டத்தை நீங்களும் பரஸ்பரம் பாராட் டிக் கொண்டே இருப்பதுதான் வியப்பாக இருக்கிறது. "சொக்கலிங்கம் தமிழே தமிழ்" என்று ஒருகாலத்தில் சொன்னீர்கள். பின்னர் "கல்கியிடம் தான் தமிழ் இருக் கிறது" என்றீர்கள். இப்போது அந்தக் கோஷ்டியில் ஒரு வரான "சாவிதான் நல்ல தமிழ் எழுதுகிறார்" என்கிறீர் கள். இது எந்த விதத் தமிழ் சேவை? நாங்கள் கேட்பது வெறும் சவுடால் தனத்தினால் அல்ல; உண்மையாகவே என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

12

சிந்தனைச்சுடர் வ. ரா. அவர்களுக்கு

சிறிய எழுத்தில் பெரிய கருத்தைப் புதைத்து எண்ணத்தை எழிலுடன் இறக்கி எழுத்தில் வடிக்கும் சிறந்த சிந்தனையாளரே,

வந்தனம். தங்குதடை யில்லாது செல்லும் தமிழ் நடைக்கு இலக்கணமென்னும் பாசக்கயிறு போட்டு பிணித்தல் கூடாது என்பது உண்மையே. ஆனால் இலக்கணமற்ற பேச்சு நடை தமிழ் நாட்டில் சமூக நிலையில் ஒரேவிதமாய் தோன்றாததுதான் தங்கள் நடைக்குப் பெருந்தடை. பேச்சு நடையை ஒட்டி எழுத வேண்டுமென்பது சிறந்த கருத்துதான், ஆனால் தமிழ் நாட்டில் ஜாதிக்கு ஜாதி பேச்சு வேறுபடுகிறது; ஊருக்கு ஊர் தமிழ்நடை மாறுகிறது. இந்த நிலையில் கூடியவரையில் பேச்சுநடையை ஒட்டியதாயும் உள்ள ஒரு தமிழ் நடைதான் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்றது என்பது எங்கள் துணிபு. "ஐந்து மாடுவந்தது" என்பதை தமிழாக நாங்கள் ஏற்கத்தயார். ஆனால் "அவன்மட்டும் ஒஸ்தியோ" என்பதை தமிழாக ஒத்துக்கொள்ள ஆலோசனை செய்ய வேண்டியதாய்த்தான் இருக்கிறது. "மனுநூல் பார்வையைக் கெடுத்துவிட்டது. நன்னூல் பாஷையைக் கெடுத்து விட்டது" என்று தாங்கள் சொல்லியுள்ள உண்மை மறுக்கமுடியாது. இத்தகைய உண்மையை பளிச் பளிச் சென்று எடுத்துக் கூறும் ஆற்றலே எங்கள் வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியது.

"பிச்சை எடுத்து பிரபுவானவன் இந்த உலகில் இல்லை. புலமைக்கு மேதையைக் கண்டால் கண்கூசும், மேதைக்கோ புலமையைக்கண்டால் பெரு நகைப்பு"— இத்தகைய உண்மையை சின்னஞ்சிறு வாக்கியங்களில் ஆழ்ந்து பதியும்படி எடுத்துக் கூறும் உங்கள் சிந்தனைக்கு வந்தனம்.

தமிழ் நாட்டில் 'தாங்கள் மேற்கொண்டுள்ள பணி மகத்தானது. பலரிடைப் போராடி முன்னின்று தங்கள் பெருமை நிலை நாட்டப்பட வேண்டும். காதல்மணம் கலப்புமணம், விதவை மணம் முதலிய துறைகளில் தங்கள் முன்னேற்றம் தமிழ்நாடு பயனுறும் வண்ணம் செய்யப்படுதல் வேண்டும், தமிழ்நாட்டில் ஒரு 'கோதைத்திவு' ஏற்பட்டாலும் நலமே.

'விஜய'த்தைப் போன்ற விதவைகளின் அலறலுக்கு வேறுகதிமோக்ஷம்கிடையாதென்றுதான் தோன்றுகிறது. எழுத்தில் மட்டுமின்றி பேச்சிலும் சிறந்து விளங்கும் சிந்தனை, எங்கள் மனத்தை கவருகிறது. ஆனால் தாங்கள் பேசும்பொழுது, தாங்கள் அடியோடு வெறுத்து விட்ட தங்கள் குலத்து பாஷையே உங்களையும் அறியாமல் வெளிப்பட்டு விடுகிறது. பேச்சை ஒட்டி நடை செல்ல வேண்டுமானால் கூட்டத்தில் உள்ள பெரும்பான்மையோருடைய பேச்சை ஒட்டியே அது செல்ல வேண்டும் என்பதை தாங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள் என்று எண்ணுகிறோம்.

தாங்கள் தமிழ் நாட்டின் சிறந்த சிந்தனையாளர் தான்; ஆனால் சிந்தனையைச் சிறிது கட்டிப்பிடிக்காமல் விட்டுவிடுகிறீர். தமிழ் நாட்டின் குறைகளைத் தலைமேல் அடித்துக் கூறுகிறீர்கள். பாரதியார் முதற்கொண்டு ராஜாஜிவரை எல்லோரிடமும் குறை காணுகிறீர். ஆனால், சுயப்பிரதாபம் அங்கங்கே காணப்படும் உமது குற்றத்தை நீர் அறிவீரா?

கடைசியாக, பாரதியாரை உலகறியச் செய்யும் பணி ஒன்றுக்கே உங்களுக்கு என்ன புகழுரை அளித்தாலும் தகும். பாரதி உணர்ச்சி வந்தால் கடிதம் வளர்ந்து கொண்டே போய் விடும், ஆதலால் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறோம். தங்கள் சிந்தனை தமிழ் நாட்டுக்கு அவசியம் வேண்டும். தங்கள் எழுத்தை அனைவரும் கற்கும்

னிலை வேண்டும். சமூகத்தையும், இலக்கணத்தையும் ஒருங்கே தாக்கினாலும், இலக்கணத்துக்கு அடிமையாகாமல் அதை துணையாக்கிக் கொள்ளும் ஆற்றலை தாங்களும் கைக்கொள்ள வேண்டும், இதுவே எங்கள் விருப்பமும் வேண்டு கோளும்.

13

திரு. பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்கட்கு

கம்பசித்திரத்தையும், கவிகளின் ஹிருதயத்தையும் தமிழில் போற்றிப்புகழும் தமிழன்பரே,

அளவற்ற ஆச்சரியக் குறிகள் போட்டு நிறப்பித் தமிழின்பத்தைக் கண்டு.ஆ! ஆ!! என்று வியக்கச் செய்வதும் ஒரு தொண்டு தான். இருந்தாலும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாவது போல், தங்கள் ஆச்சரியக் குறிகளே தங்கள் நடையைக் கெடுத்து விடுகிறதென்று எங்களுக்குத் தோன்றுகிறது.

கவிதை நயத்தைக் கண்டவர்களுக்கு "என்ன நயம்! என்ன இனிமை! என்ன எளிமை !!!" என்றெல்லாம் வியந்து எழுதினால் தான் போற்றத் தெரியும் என்று எண்ணுவது தமிழனையே தாழ்த்தி விடுகின்றது.

மேலும் "எம்பெருமானின் சௌலப்பியம்" முதலிய விஷயங்களைத் தாங்கள் எடுத்தாளும் பொழுது சமஸ்கிருத காலக்ஷேபம் கேட்கிறோமா, தமிழ் இலக்கியம் படிக்கிறோமா, என்ற சந்தேகம் வந்து விடுகிறது. முரண்பட்ட இவ்விரு கொள்கைக்கும் தாங்கள் ஒருங்கே உழைக்கப் பார்ப்பது அனைவரையும் திருப்தி செய்ய முயன்ற வண்ணான் கதைக்குத் தான் கொண்டுவிடுமோ என்று அஞ்சுகிறோம்.

சைவ, வைணவ சமரஸத்துக்குப் பாடுபடும் தங்கள் தொண்டு போற்ற வேண்டியதே! ஆனால் "கைலாசத்தில்

ஒரு நோபல் பரிசு" என்றெல்லாம் போட்டுப் பழமைக்கும் புதுமைக்கும் பாலம் கட்டும் முயற்சி எவ்வளவு தூரம் பலிக்கும் ? எண்ணிப்பாருங்கள்!

14

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு,

தமிழ் நேயர்களிடையே தனி இடம் பெற்று விட்ட ஆசிரியர் 'கல்கி' அவர்களே,

தமிழ் நாட்டில் வீடுதோறும் பத்திரிகை படிக்கும் ஆற்றலைப்பரப்பிய பெருமையில் உங்கள் பெயர் முன் னணியில் நிற்கிறது. தனிப்பத்திரிகை ஆரம்பித்தபின்னர் தங்கள் நிலை இன்னும் சிறப்புற்றுத்தான் விளங்குகிறது. ஆனால் தங்கள் பத்திரிகை, தங்கள் தொடர் கதைகளுக் காகவே நடந்து வருகுறதா? என்று தமிழ் நாட்டினர் ஐயுறுதல் இயல்பே. வேறு எந்தப் பததிரிகையிலாவது ஆசிரியருடைய தொடர்கதைகளே வெளிவந்துகொண்டி ருக்க நாம் காண்கிறோமா? இதனால் தங்கள் தொடர் கதைகளை நாங்கள் குறை கூறுவதாக எண்ணவேண்டாம்.

சரித்திர சம்பந்தமான அந்த நீண்ட தொடர் கதை கள்—படிக்கப்படிக்க அலுப்புத் தட்டாமல், முக்கியமாக நம் நாட்டுப் பெண்மணிகளுக்கு ஒரு பெரு விருந்தாய் அமைந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை; ஆனால், அந் தக் கதைகளில் வரும்பாத்திரங்களும், நடைபெறும் சம்ப வங்களும்—நம்முன்னால்காணக்கூடியதா, அல்லது வாழ்க் கையை அடிப்படையாகக் கொண்டதா, என்பதை எண் ணும்பொழுது, அவற்றுக்குத் தனி இடம்தான் தேட வேண்டி யிருக்கிறது. வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கதைகளுக்குத்தான் தங்கள் பரிசுப் போட்டியில்கூட இடம் கிடைக்கிறது—இந் நிலையில் தன்னந்தனியுலகில் சஞ்சரிக்கும் அக்கதைகள் தமிழ் நாட்டுக்கு எத்தகைய

பயனை விளைவிக்கும் என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். மேலும் தங்கள் பத்திரிகை—தங்கள் கதையைத் தவிர வேறொரு காரியத்துக்கும் உதவுகிறது என்ற உண்மையை ஒப்புக்கொண்டு விடுகிறோம். தங்கள் அன்பின் துணைவர் ராஜாஜியை வானளாவப் புகழ்ந்து, அவருக்காக அளவற்ற பிரசாரம் புரிவதற்கும்; தங்கள் பத்திரிகையைப் புரட்டினால் 10 பக்கம் தொடர்கதை, 12 பக்கம் ராஜாஜி. இதுதான் பத்திரிகை தருமமா? காசுகொடுத்து வாங்குபவன் பலவேறு விஷயங்களைக் காண விரும்புவான் என்ற உண்மை ஏன் உங்களுக்குப் புடப்படவில்லை?

ஏட்டிக்குப்போட்டி, சாரதையின் தந்திரம் முதலிய கதைகள் எழுதிய அந்நாளில் தங்கள் எழுத்தில் கண்ட நகைச்சுவை எங்கே ஒளிந்துக்கொண்டிருக்கிறது? தங்களிடம் காணக்கிடையாத நகைச்சுவை தங்கள் பத்திரிகையில் காணக்கிடையாத அதிசயம் அல்லவா? முன்போல் நகைச்சுவைக்கும் ஏன் தாங்கள் உயரிய ஸ்தானம் அளிக்கக் கூடாது? முக்கியமாய், நாங்கள் உங்களுக்கு விடக்கூடிய வேண்கோள் ஒன்றே ஒன்றுதான். பழைய கல்கியாய் மாறிவிடுங்கள்.

ஆமாம், உங்களுடைய புத்தகங்களை எல்லாரும் விலை கொடுத்து வாங்கிப் படிக்கவேண்டுமென்று எண்ணுகிறீர்களா? அல்லது படிக்கக்கூடாதென்பது உங்கள் கருத்தா? ஏன் கதைப்புத்தகங்களுக்கு அவ்வளவு அபார விலையை வைக்கிறீர்கள்? எவ்வளவிருந்தாலும் விலை கொடுத்து வாங்கிப் படிக்க செல்வர்கள் இருக்கிறார்களென்ற தைரியமா? எப்பொழுதோ சங்கீதக் கச்சேரிகளைப் பற்றி எழுதிய குப்பைக் கட்டுரைகளையெல்லாம் "சங்கீத யோகம்" என்று பெயர் வைத்து நாலரை ரூபாய்க்கு விற்பதென்றால் அதற்கும் தைரியம் வேண்டியது தான்!

இதற்கெல்லாம் காரணம் தமிழ்ப்பண்ணை - சின்ன

அண்ணுமலையாயிருந்தால் அவரை தமிழ் அன்பர்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

ஒரு சில தமிழ்ப்பெரியார்களின் உருவங்கள் 'கல்கி'யின் மேலட்டையை அலங்கரிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்னே? தலையாய காரணம் என்னே?

தெய்வத்திரு. வி. க. விடம் பழகிய தாங்கள் கூடவா தரா தரம் பார்ப்பது?

பாரதியார் மண்டபத்துக்காகத் தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியைப் போல கப்பலோட்டிய வீரர்— வ. உ. சி. அவர்களுக்காகவும் நிதிதிரட்ட முயற்சி எடுத்துக்கொண்டால் நலம்.

25

திரு, எஸ், வி. வி. அவர்களுக்கு

ஸ்வாமிந்து!

நமஸ்காரம்! ஆத்திலே எல்லோரும் க்ஷேமந்தானே? ஆமாம், ஆம்படையாள், பெண்டாட்டி சமாச்சாரம்னு மட்டும் ஒங்களுக்கு ஒரு தனி குஷி கிளம்பி விடறதே, அதேன்? பார்க்கோம்; அதைன்னமோ மீதி விஷயங்கள்ளே அவ்வளவு ஜோர் தட்டமாட்டேங்கறது.

நாங்களும் பார்க்கிறோம், உங்கள் கதைகள் ஒரு வகுப்பினரின் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டு அப்படி ஏன் அமையவேண்டும்?

"இதைத்தான் நான் கண் கூடாய்க் காண்கிறேன், அதைத்தான் என்னுல் எழுத முடியும்" என்று நீங்கள் கூறுவதானுல் தமிழுலகத்தில் தங்கள் இடம் சிறிது, என்பதைத் தாங்கள் உணருதல் வேண்டும். நகைச்சுவையைக்கொண்டு வாழ்க்கையைப்பார்க்கும் ஆற்றல் நல்லது ஆனுல் தங்கள் ஆங்கிலக் கட்டுரைகள் தமிழ்க் கட்டுரைகளை விட அழகாய் அமைந்திருக்கும் ஆற்றல் எதனுல்?

16

திரு. மு. அருணசலம் அவர்கட்கு,

ஸ்ரீ டி. கே. சி, யின் மறுபிறவியே!

பழந்தமிழ்ப் பாட்டுகளை வைத்துக் கொண்டு அடி அடியாய் அலசிப் பிழிந்து "ஆ ஹா! ஊ ஹூ!" போடுவது தனி இலக்கிய முறை என்றபண்பு தங்களையொர்த்தவர்களால் இன்று நிலவி வருகிறது. விதவிதமான விஞ்ஞானக் கட்டுரைகள்; நல்ல நல்ல நாடோடிப் பாட்டுகள்; கண்டகண்ட காய்கறி வகைகள்; எல்லா வற்றையும் பற்றி ஆங்கிலக் கட்டுரைகளிலிருந்தும், தமிழ்ப்பாடல்களிலிருந்தும் ஆராய்ந்தெடுத்துத் தமிழ் உலகுக்கு அளித்துள்ளீர். ஆனால் பழம் பாடல்களைப் புகழ்ந்து புராணமெழுதும் ஆற்றல் முழுதும் உலோகங்கள், உப்பு முதலியவற்றைப் பற்றி எழுதும்போது காணப்படாதது ஏன்?

காசிப்பீடத்திலமர்ந்து தமிழ் வசன நடையை ஒரு கலக்குக் கலக்கித் தங்கள் பெயர் எங்கும் அடிபடும்படி செய்து விட்டீர்கள்; மற்றவர்களைப்போல், குறை கூறும் தங்கள் தன்மைகண்டு நாங்கள் பொங்கி எழவில்லை. பெரியார் திரு, வி. க. கல்கி, டி. கே. சி. மூவர் தமிழையும் ஒருங்கே புகழும் தாங்கள் இலக்கிய விமரிசனம் என்பதற்கு எத்தகைய அளவு கோல் கொண்டு மதிப்பிடுகிறீர்கள், என்பது எவ்வளவு தூரம் மண்டையை உடைத்துக் கொண்டாலும் எங்களுக்குப் புலப்படவில்லை,

தமிழ் மரபு, பண்பு என்றெல்லாம் தாங்கள் எடுத்து அச்சுறுத்தும் அந்த நிலை எங்களுக்குப் புரியவில்லை; எங்களைப் பொறுத்தவரை ரிக்ஷாக்காரனும் தமிழன்தான், பண்ணை உழும் உழவனும் தமிழன்தான். ரிக்ஷாக்காரனுக்குப் புரியும்படி எழுத வேண்டுமென்றால் தங்களுக்குக்குறைவாகத்தோன்றுகிறது. உழவனுக்குப்புரியும்படி

எழுதுவது உயர்ந்த இலக்கியமென்று தங்கள் கருத்தாயிருக்கிறது, இந்த மனப்பான்மையின் ஆழம் காண்பது அரிது! அரிது!! குரோமியத்தைப் பற்றி ரிக்ஷாக்காரனும் புரிந்து கொள்ள முடியாது, பண்ணை உழவனும் புரிந்து கொள்ள முடியாது, எனினும் இவற்றைப் பற்றி தாங்கள் எழுதியுள்ளது தமிழ் இலக்கியம் தான் என்பதில் எங்களுக்கு ஐயம் கிடையாது. ஆகவே தாங்கள் மதிப்பிடும் அளவு கோல் தவறு. அதைத்திருத்தி அமைத்தும், இலக்கியத்துக்கு தக்கதொண்டு புரிவீர்களென்று எண்ணுகிறோம்.

17

திரு. சாமிநாத சர்மா அவர்கட்கு

அரசியல் ஞானத்தை அலசிப்பிழிந்து அள்ளி, அள்ளி வீசும் அருந்தமிழ் அன்பரே,

ஆங்கில முறையில் அரசியல் கட்டுரைகளைத் தமிழ் உலகத்துக்கு அளித்து, தாங்கள் நிலையான தொண்டை ஆடம்பரம் அட்டகாசமின்றி செய்து வருதல் எங்கள் கவனத்தைக் கவர்ந்தது. கட்டுரை உலகில் தனிமுறைவகுத்து அரசியல் பிரச்னைகளில் வாதிப்பிரதி வாதங்கள் 2-கட்சிகளையும் எடுத்துக் கூறி சரியான முடிவுக்குவரும் பண்புபோற்றத்தக்கதே. ஆனால் அநேக கட்டுரைகளில் ஆங்கிலத்தின் சாயை அதிகமாய் வீசுகின்றது. சிலவற்றில் ஆங்கில மொழிகள் அப்படியே தென்படுகின்றன. மேலும் ஆங்கிலம் அறியாத தமிழர்கள் தங்கள் கட்டுரைகளைப்படித்துஇன்புறமுடியுமா என்பது ஐயப்பாடுதான். இந்தக் குறைகளெல்லாம் தாங்கள் கொண்டுள்ள் துறையின் தனிமையும், புதுமையும் காரணமாய் விளைந்தவை என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். இருந்த போதிலும் எதிர்காலத் தமிழ் உலகில் பாமரனுக்

கும் புரியும்படி விஷயங்களை விளக்கிக்கூறுவது தான், போற்றத்தக்க தொண்டாகும் என்பதை நோக்குங்கால் இந்தத் துறையில் தாங்கள் இன்னும் முன்னேறவேண்டும் என்பது எங்கள் பேரவா.

இங்கர்சால். கார்ல்மார்க்ஸ், பிளேட்டோ முதலிய மேனாட்டு அறிஞரை தமிழ் உலகத்துக்கு அறிவுறுத்திய தொண்டு அவாவற்பாலதே; இத்தகைய வெளியீடுகள் இன்னும் பல வரவேண்டுமென்று நாங்கள் விரும்பினலும், அதற்காகத் தமிழர்கள் கொடுக்கவேண்டி வரும் விலையைக்கண்டு அஞ்சுகிறோம்.

தங்கள் புத்தகங்களைப் பொறுத்தவரையில் விலையைவிட அவற்றின் மதிப்புஉயர்வாய் இருக்கலாம். ஆனல் தமிழ் நாட்டின் பொருளாதார நிலையைக் கவனித்தால் தங்கள் புத்தகங்களின் விலை அதிகம் என்பது மறுக்க முடியாது. செட்டிநாட்டு அன்பர்களுக்கும், ரங்கூன் நண்பர்களுக்கும், சிலோன் வாசிகளுக்கும் மட்டுமின்றித் தமிழ் நாடு முழுமைக்கும் தங்கள் கட்டுரைகள் பயன்பட வேண்டும் என்ற பேராவல் உந்த இது கூற முன் வந்தோம். தங்களைப்போன்ற பலர் தோன்றி அரசியல் கட்டுரைகள் ஆர்வத்துடன் எழுத முன் வரவேண்டும் என்று விழைகிறோம். தங்களுடைய தமிழ்ப் பண்பும் அதிகரித்து ஆங்கிலச்சாயை மறைய வேண்டுமென்பது தான் நாங்கள் விடுக்கவேண்டிய வேண்டுகோள்.

18

பர்லி: சு. நெல்லையப்பர் அவர்களுக்கு

உலக மகாகவி பாரதியாரின் அத்யந்த நண்பரே,

தங்கள் பெருமைப் பண்டைப் பெருமையாகப் போய் விட்டது. தமிழையும் தமிழரையும் போற்றிப் புகழ்ந்து தமிழ்ப் புத்தகங்கள் நாடெங்கும் மலிந்து காணும் இங்

நாட்களிலும் தங்களுக்குத்தமிழ்இலக்கியத்தில்ஒருஇடம், ஒரு உயரிய இடம் கிடைக்காதது தமிழர்களாகிய நாம் வெட்கப்படவேண்டிய விஷயம். ஆகவே தங்களுக்கு எழுதும் இக்கடிதம் தங்கள் மூலம் தமிழ் நாட்டுக்கே எழுதப்பட்டதாகும்.

பாரதியாருடைய நட்பு ஒன்று மட்டும் தமிழ் இலக்கியத்தில் திரும்பத்திரும்ப படித்திளப்பதற்கு உரிய விஷயமாகாது. பழங்கதைகளை மேடை மீதேறி மணிக்கணக்கில் பேசத்தாங்கள் தயாராயிருக்கிறீர்கள். ஆனால் கேட்பவர்கள் அடிக்கடி அலுத்துப்போகிறார்கள் என்ற மனோதத்துவமும் தங்களுக்குத் தெரிந்திருந்தால் நலமாயிருக்கும். லோகசக்தி கிடைத்திருப்பது பற்றி மகிழ்ச்சி. அதை தமிழ் சக்தியாக்குங்கள்.

19

பம்மல். சம்பந்த முதலியார், B.A., B.L. அவர்கட்கு,

நாடக மணியே., நடிக சிகாமணியே, நாடகஆசிரியரே!

தமிழ் இலக்கியத்தில் நாடகம் என்ற தனித் துறை இன்னும் தாழ்ந்து நிற்பது, ஆழ்ந்து வருந்தவேண்டிய விஷயம். சுந்தரமான சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியத்துக்குப் பிறகு தங்கள் நாடகங்கள் தான் தமிழகத்திலே குவிந்து வருகின்றன. இடையில் திரு, டி, என் சேஷாசலத்தின் "பிஸாரோ"போன்ற சில சிறந்தமொழி பெயர்ப்புகள் கடுந்தமிழ் காரணமாக நன்றாய்ப் பரவ முடியவில்லை, ஆனால் "சபாபதி" மூலம் சக்கைப் போடு போட்டுத் தாங்கள் முன்னுக்கு வந்து விட்டீர்கள். "மனோஹரா"வும் "வேதாள உலகமும்" திரும்பத்திரும்ப நடிக்கப் பெற்றுப் பிரபலமாகி விட்டன. ஆயின் தங்களுடைய எண்ணாற்ற மற்ற நாடகங்கள் பிரபலமாகாதது ஏன் என்று தாங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா?

எமக்குத் தோன்றும் காரணத்தை எடுத்துரைக்கலாம் என்றுதான் இதை எழுதினோம். எளிமையை நாங்கள் வியக்கிறோம்; பாராட்டுகிறோம்; போற்றுகிறோம்; புகழ்கிறோம். ஆனால், எளிமை கயமையாக மாறும்போது, நகைச்சுவை மட்டத் தமாஷாகும் போது அதை வெறுக்கிறோம்; ஒதுக்குகிறோம்; வேண்டாம் என்கிறோம். இது மனித இயல்பு. ஜெகப் பிரியரின் 'ஹாம்லெட்'டையும் அதைத் தாங்கள் தமிழ்ப்படுத்திய "அமலாதித்த"னையும் வைத்துக்கொண்டு ஒப்பிட்டால், அமலாதித்தனைப் போற்ற முடியுமா? இயன்ற காரியங்களில் முயன்று வெற்றிபெற முன் வராமல் எட்டாப் பழங்களுக்குக் கொட்டாவி விட்டால் கிட்டுமா?

ஆகவே உயர்தர நாடகங்களை எதிர்கால ஆசிரியர்களுக்கு விட்டுவிட்டு (அவை இன்னும் எழுதப்படவில்லை என்பது வருந்த வேண்டிய விஷயம்) 'சபாபதி' போன்ற நகைச்சுவை நாடகங்களில் தாங்கள் ஈடுபட்டால் தங்கள் பெயரும் புகழும் ஓங்கி உயருமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

20

திரு. மாயாண்டி பாரதி அவர்கட்கு,

புதுமைப் பித்தும், புரட்சிக் கனலும் பொதிந்து காணும் பொதுவுடைமைப் பெரியோய்,

பஞ்சநதிகளும் பாய்ந்தோடும் பாஞ்சாலம் கண்ட நம் நாட்டில் பஞ்சம்! பஞ்சப்பேயின் வஞ்சப் பற்களின் முன் தஞ்சம் தஞ்சம் என்று அஞ்சினவாறு கெஞ்சி நிற்பதோ ஏழை இந்தியனின் கதி! அச்சத்தினின்றும் அடிமைத் தளையினின்றும் ஆழ்ந்த துயிலினின்றும் அடிமை இந்தியனைத் தட்டி எழுப்பத் தங்களை யொத்த தவப் புதல்வர்கள் நம் நாட்டுக்கு இன்று தேவை! மிகத் தேவை!! மிகமிகத்தேவை!!!

காலவெள்ளத்தோடு முழுகிக் காங்கிரசின் பெயர் கொண்டு தங்கள் பெயரை நிலைநாட்டுவதே நோக்கமெனக்கொண்ட சிலர் போலன்றி "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்ற தமிழர் மரபினுக்கு ஒப்பான, உண்மையையும் காரசாரத்துடன் எடுத்துரைக்கும் ஆற்றல் வல்லீர்! தமிழ் இலக்கிய உலகில் பலர்போல் அதிக ஏடுகள் எழுதித் தள்ளாவிட்டாலும் தாங்கள் எழுதியுள்ள இரண்டொரு புத்தகங்கள் தமிழில் தனி இடம் பெறவேண்டியவை என்பது எமது திண்ணமான எண்ணம். "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற அறைகூவலுக்கு இணங்கி தங்களைப்போல் தொண்டு செய்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதுவும் பூசலும், பெருமையும், பொச்சரிப்பும் நிறைந்த நம் நாட்டிலே அம்மம்ம! கேட்கவும் வேண்டுமா?

"படுகளத்தில் பாரததேவி" எழுதி நம் அன்னையின் நிலையைக் கண்டு அனைவரும் இறங்கி வீறுகொண்டு எழுந்து, சீரும் சிறப்பும் அளிக்க முற்படும்படி செய்துள்ளீர். பரந்த நோக்கம் கொண்டு எவரும் இன்றைய நிலையில் சமதர்மப் புரட்சிக்குத் தப்பமுடியாது. அத்தகைய புரட்சியின் அடிப்படையை, தங்களை யொத்தவர்கள் தான் தமிழ் நாட்டுக்கு எடுத்துரைத்து "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை" செய்யும் உலகத்தை நிலைநாட்ட வல்லவர்கள், ஆயினும் இத்தகைய வித்தகரின் இன்றைய நிலை என்ன? அவரொரு அரசியல் தலைவரா? அல்ல:- எழுத்தாளர் தலைவரா? அதுவும் அல்ல.

ஜனசக்திக்கு ஆங்கிலக் கட்டுரைகளை தமிழ் படுத்தித் தரும் சாதாரண கூட்டாசிரியர்! இந்நிலையில் தங்களை வைத்திருப்பது தமிழ் நாட்டுக்கே தகாது. ஆகவே தங்களுக்கு நேரடியாக நாங்கள் கூற வேண்டியது ஒன்றுமில்லை.

22

திரு. பெ. நா. அப்புசாமி, அவர்கட்கு,

விஞ்ஞான வித்தகரே.

வணக்கம் பல. தோசை மாவின் பொங்கு தலிலும் மோட்டுப் பூச்சியின் கடியிலும் விஞ்ஞானத்தைக் கண்டு அதைக் கதையாக விளக்கிக் கூறும் ஆற்றல் தங்களுக்கே உரியது. அரும்பெரும் தத்துவங்களை சின்னஞ் சிறு கதைகளாக எடுத்துச் சொல்லித் தமிழுக்கு நல்ல தொண்டு செய்து வருகின்றீர்கள். நண்பர் மாணிக்கத்துடன் சேர்ந்து பரிசு புத்தகங்கள் எழுதி எக்ஸ்ரேயையும், மின்சாரத் தையும் பற்றி எடுத்துரைத்தீர்கள்.

விஞ்ஞானத்தில் மட்டுமின்றி இலக்கியத்திலும், சரித் திரத்திலும் கூட தங்கள் ஆற்றல் வெளிப்பட்டுள்ளது. சங்கத் தமிழிலுள்ள பாடல்களை தாங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முயன்றிருப்பது போற்றுதற் குரிய துறை. பத்திரிகைகளில் கதைகதையாய் எழுதித் தள்ளு வதைவிட இந்தத் துறை தங்களுக்கு மேன்மை அளிக்கு மென்பது எங்கள் தாழ்மையான அபிப்பிராயம். தங்கள் விஞ்ஞானக் கதைகளில் 'சங்கரய்யரும்,' வெங்குட்டு'வும் போன்றவர்களே தோன்றுவதைவிட, 'சிவசங்கர முதலி யாரும், அப்பய்யா நாயுடு'வும் கூட தோன்றினால் தங்கள் கட்டுரைகள் படிக்கும் பலருக்குத் தங்களை அதிகமாய் ரசிக்க முடியுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவ்வளவு அரிய தொண்டு செய்யும் தாங்கள் மேடை யில் தோன்றிப் பேச யார் அழைத்தபோதும் மறுப்பது மரபாய்விட்டது, தமிழர்கள் மிகவும் வருந்த வேண்டிய விஷயம். பணத்துக்கன்றிப் பேசுவதில்லை என்ற வக்கீல் தொழில் நியதியின்படி. தங்கள் மறுப்பு சரியாயிருக்க லாம். ஆனால் தமிழுக்குத் தொண்டு புரிவது என்ற நோக்கமும் தங்களுக்கு வேண்டும்.. எழுத்தோடு மட்டும்

மில்லாது பேச்சிலும் தங்கள் திறமை வெளிப்பட வேண்டும்; பரவவேண்டுமென்பது எங்கள் கருத்து; அவா. இதை ஏற்று நடப்பீர் என்று எண்ணுகிறோம்.

22

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கட்கு,

ஐயரவர்களின் அத்யந்த சிஷ்யரே !

புலமையின் பொலிவும், எளிமையின் எழிலும் ஒருங்கே திரண்டு நவ நவமான கதை, கட்டுரைகளை நாட்டுக்கு நல்கியருளும் நற்பணி மறக்க இயலாத மகத்தான பணியாகும். கந்தரனுபூதிக் கருத்துரைகள் கண்டருளுவதிலும், நாடோடிப் பாட்டின் நல்லிசைகளைத் திரட்டித் தருவதிலும் ஒருங்கே முனையும் தங்கள் திறமையே திறமை ! சிறு கதையிலும், செய்யுள் விளக்கத்திலும், நகைச்சுவைக் கட்டுரையிலும் கூடத்தங்கள் திறமையை யைக் காட்டியிருக்கிறீர்கள்.

தங்கள் திறமையை வியந்து போற்றிப் பணியும் நாங்கள் சில சிறிய சந்தேகங்களைக் கிளப்பினால் எங்களைக் கண்டு சீறி எழமாட்டீர்களென எண்ணுகிறோம்.

(1) தங்களைத் தலைமையாய்க்கொண்டு நடந்துவரும் "கலைமகள்" பத்திரிகையில் வடமொழி அறியாத எவரும் உதவி ஆசிரியர் பகுதிக்கு தகுதியற்றவர்கள் என்று கருதப்படுவது உண்மைதானே?

(2) தங்கள் தமிழ் நடையிலும், தங்கள் ஆதரவில் எழுதிவரும் அன்பர் கா. ஸ்ரீ. ஸ்ரீ போன்றவர்கள் நடையிலும், வட மொழி அபாரமாய் விரவிவருவது இயற்கையின் வேகந்தானா அல்லது... .....?

(3) பாரதியார் காலமாவதற்கு முன் எழுதி வைத்து விட்டுப்போன கட்டுரைகள் இன்னும் எத்தனை தங்கள் வசம் இருக்கின்றன ?

(4) சிற்சில எழுத்தாளர்களுக்கே அடிக்கடி தாங்கள் சலுகை காட்டுவது அவர்கள் எழுத்து வன்மையைப் பொருத்தா? பிரபல எழுத்தாளர்கள் எழுதினால்தான் பத்திரிகை விற்பனையாகும் என்று இன்றைய 'கலைமகளின்' நிலையைக் குறித்துக் கூற முடியுமா?

இவைதான் எங்கள் மனதில் எழுந்த சந்தேகங்கள்; விஷமத்துக்காக எழுதப்பட்டதல்ல; விளக்கம் காணவே எழுதப்பட்டது. பயப்படாதீர்கள்.

23

திரு. T. S. சொக்கலிங்கம் அவர்கட்கு,

தமிழ்ப்பத்திரிகை உலக ஜாம்பவானே..

காலணா பத்திரிகையான "காந்தி" நடத்திய நாள் முதல் இன்று வரை தங்களுக்கு விளம்பரத்துக்குக் குறைவில்லை. தாங்கள் சிறை சென்று வெளிவந்தால் அதற்குத் தனி விளம்பரம்? பத்திரிகையிலிருந்து விலகினால் அதற்குப் பத்தி பத்தியாக விளம்பரம். மேலும் அதைப்பற்றி புத்தகமும் கூட!! ஆக இப்படி விளம்பர உலகத்திலே வளர்ந்த தங்களுக்கு நாங்களும் வலியவந்து விளம்பரம்தர முற்படுதற்கு முதற்காரணம் தங்கள் அமைப்புத் திறமையைப் (Organising Capacity) பாராட்டத்தான்.

அதிகப்பணமின்றி 'தினசரி' பத்திரிகை ஆரம்பிக்கும் அபாரமான கர்ரியத்தைக் காகிதப் பஞ்சம் நிறைந்த, கட்டுப்பாடுகள் மடிந்து கிடந்த நாளில் சாதித்தது அரும் பெரும் காரியமே. ஆனால் அப்படி ஆரம்பித்த பத்திரிகை அதிகம் பரவாததற்கு உண்மைக்காரணம் தமிழர் பத்திரிகையின் தராதரத்தை அறிந்துதான் படிக்கிறார்கள் என்று கொண்டால் தாங்கள் கோபிக்கமாட்டீர்களென்று எண்ணுகிறோம்.

'தினமணி'யில் தாங்கள் ஆசிரியாராயிருந்தபோது எதிர்க் கட்சியினர் (Forward Block) என்று அழைக்கப் பட்டவர்கள் இன்று உத்தம தேசபக்தர்கள் என்று தங்களாலேயே போற்றப்படுவது அவர்கள் உயர்வைவிட தங்கள் தரத்தையே குறிக்குமெனக் கொள்கிறோம்.

தமிழ்ப் பத்திரிகாசிரியர் சம்மேளனத்தில் தாங்கள் உயரிய ஸ்தானம் வகித்து பல நல்லயோசனைகளை கூறியிருப்பது பாராட்டத்தக்கதே ஆனல் இந்த யோசனைகளையும், இதைப்போன்று எழுத்தாளர் மாநாடு முதலியவற்றில் தங்கள் யோசனைகளை படிக்குங்கால் நண்பர் வ. ரா. அவர்களின் சாயல் தங்களிடமும் தென்படுகிறது. இது தாங்கள் வ. ரா. வுடன் நெருங்கிப் பழகியதின் குற்றமோ? குணமோ? அறியோம். எப்படியிருந்தாலும் பத்திரிகை உலகில் பெயர்பெற்ற தாங்கள், கருத்திலும் தனிமையும் உயர்வும் பெற்றுத் திகழவேண்டுமென்பதே எங்கள் வேண்டுகோள்.

24

திரு. ஈ. வே. ராமசாமி நாய்க்கர், அவர்கட்கு

திராவிட குலதிலகமே,

மதத்தை, அடியோடு ஒழித்து ஆரியத்தை அழித்து, மூடக்கொள்கைகளை இடித்து முன்னேற்றம் ஒன்றே கருதி உழைக்கும் சிறந்த, உயர்ந்த செவ்விய, சீரிய தலைவரே,

தமிழுணர்ச்சியைத் தலை தூக்கச் செய்தீர்கள். ஆனல், வெறுப்புணர்ச்சியையும் கிண்டிவிட்டீர்களே! மதத்தை வெறுத்தாலும் சிறிது சகிக்கலாம், கவிகளை வெறுப்பதற்கல்லவா கங்கணம் கட்டிவிட்டீர்கள்? தமிழுணர்ச்சியைத் தழைத்தோங்கச்செய்த தங்கள் மாபெ

ருந்தொண்டை எழுத்தால் எடுத்து இயம்ப இயலாது. தங்களுடைய தளபதிகளும், வீரர்களும் அஞ்சாது அள்ளி வீசும் வசைமாரிகள் தங்கள் நாவிலிருந்து வெளிவராதது மிகவும் போற்றத்தக்க விஷயம். மிக முக்கியமாகத் தற்கால அரசியலில், உலகின் உண்மை நிலையை அறிந்து, பதவிக்கும் பதட்டம் காட்டாமல், கிளர்ச்சியிலும் விளம்பரத்திலுமே கட்சியின் கவனத்தைச் செலுத்தவைக்கும் தங்கள் திறமை வியக்கத்தக்கதே.

எதிர்கால உலகில் பொதுவுடைமைக் கொள்கைதான் பரவப்போகிறதென்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே, அதற்காக எவ்விதத்தில் பாடுபட்டாலும் அவர்களைப் பணிவது எங்கள் கடமை. இருந்தாலும் வெறுப்புணர்ச்சி என்ற அடிப்படையைக்கொண்டு பொதுவுடைமை மாளிகையை எழுப்பமுடியுமா, என்பது ஐயப்பட வேண்டிய விஷயம். தங்கள் கட்சியைப் பிணைத்து நிற்பது இந்த வெறுப்புணர்ச்சிதான் என்று நாங்கள் கூறினால் தங்களுக்குக் கோபம் வரலாம். ஆனால் சிறிது சிந்தித்துப் பாருங்கள். மதத்தின்மீது வெறுப்பு, காவியங்கள்மீது வெறுப்பு, ஆரியர்மீது வெறுப்பு-இத்தகைய வெறுப்புணர்ச்சிதானே தங்கள் அடிப்படைக் கொள்கை?

இவை ஒவ்வொன்றுக்கும் சிறந்த காரணங்கள் இருக்கலாம்; ஆயின் இவையெல்லாம் தகர்ந்தபின் தாங்கள் காண விழையும், அமைக்க விரும்பும் ஒரு சமுதாயதிட்டத்தையும் நாங்கள் அறிய விரும்புகிறோம். அது சமதர்ம உலகம் என்று சொன்னால் இன்றைக்கு நாட்டிலுள்ள சமதர்மக் கட்சிகளுடன் தாங்கள் ஒத்துழைக்க மறுப்பதேன்? அது திராவிடர் ஆட்சிமுறை என்றால் அம்முறை திராவிடர்களுக்கு எத்தகைய நன்மைகளையும் சலுகைகளையும் அளிக்கும்?

தங்கள் கொள்கைகளில் பல புரட்சிகரமானவை; போற்றத் தக்கவை; புகழத்தக்கவை; ஆதரிக்கத்தக்கவை

எனினும் தாங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குப் பணிந்து நிற்கும் விந்தை எங்களுக்குப் புரியாத புதிராக விருக்கிறது. எதிர்காலத்தில் தங்கள் கட்சி அதி தீவிர மாய் பரவப்போகிறது என்பதில் ஐயமில்லை; ஆனால் அந்தத் தீவிரம் பாமர மக்களை எங்குகொண்டு விடுமோ என்றுதான் பயமாயிருக்கிறது!

ஆகவே நாங்கள் விடுக்கும் வேண்டுகோள் இதுவே. சமதர்மம் ஒன்றுதான் திராவிடர்களுக்குத் தக்க பலன் அளிக்கும் என்று தாங்கள் கருதினால், நாட்டிலுள்ள மற்றைய சமதர்மக் கட்சிகளுடன் சேர்ந்துழைத்தல் தங்களுக்குத்தகுதி, தங்கள் கட்சிக்குச்சரி. நாட்டுக்குநலன்.

25

திரு. C. N. அண்ணாதுரை, M. A., அவர்கட்கு

தன்மானத்தலைவரும், திராவிடர் நிலைக்கிரங்கிப் போரில் இறங்கியுள்ள 'தளபதி'யான அண்ணல் அண்ணாத்துரை அவர்களே!

நாட்டுமக்களை வாட்டும் இன்னல்களையும், நந்தமிழில் நடமாடிவரும் பல பொய்யுரைகளையும் சாதி, சமய வேறுபாடுகளையும் எதிர்த்துப் போராடும் தங்கள் பண்பு எங்கள் பாராட்டுக்குரியதே.

பழமையின் பற்றைக்களைந்து புதுமையின் புத்துணர்ச்சியை மக்களிடை மாண்புடன் பரப்பும் தங்கள் சீரிய செய்கைக்கு எங்கள் நலமுறுநன்றி.

திராவிடர் நிலையைப்பற்றியோ தமிழனின் தனிப் பண்பு, தனிக்கலை, தனி இனப்பற்று முதலியவற்றைப் பற்றியோ நாங்கள் விவாதத்தில் இறங்க விரும்பவில்லை. அதற்கு அரசியல் மேடை இருக்கிறது. ஆனால் மதத்தை எதிர்க்கும் பணி இலக்கியத்திலும் புகுந்து இரண்டுக்கும்

பெருத்த குழப்பம் விளைவிக்கும்போது ஒருசிறு வார்த்தை அவசியம் என்றே தோன்றுகிறது. நாட்டுக்கு நல்ல ஏடுவேண்டும். திருப்பித் திருப்பிப் பழம் புராணத் துக்குப் புது உரைகளே சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்பதையெல்லாம் நாங்கள் நன்கறிவோம்; ஆனால் பழம் புராணங்களைப் பொசுக்கிவிடவேண்டு மென்று புறப்பட்டுள்ள புரட்சி இயக்கம் எத்தகைய பலன் தரும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

தனிப்பட்ட புராணங்கள்மீது பாயாது மதத்தையே எதிர்த்துப் பிரசாரம் செய்தால் ஒருவேளை தங்கள் பிர சாரம் பயன் தரலாம்; அதிலும் இந்துமத மூடக்கொள் கைகளை எதிர்க்கும்போது கிருஸ்தவர்களுக்கும், இஸ்லா மியர்களுக்கும் சிறந்த கொள்கை இருப்பது போலவும் இந்துக்கள்தான் மூடக் கொள்கைகளில் ஆழ்ந்திருப்பது போலவும் தாங்கள் எடுத்துக்கூறுவது மிகவும் வெட்கக் கேடான செய்தி அல்லவா; (நல்ல தீர்ப்பு-பக்கம் 8,) மதத்தை எதிர்க்கும் தைரியம் தங்களுக்குண்டானல் எந்தமதத்திலும் உள்ள மூடக்கொள்கைகளைத் தைரிய மாக ஏன் எதிர்க்கலாகாது?

பஞ்சம்! பஞ்சம்!! என்று பறைசாற்றும் பொது வுடமைக்காரர் சார்பில் ஒரு வார்த்தை "பஞ்சமென்றல் பார்ப்பானுக்கு ஒரு விதம், பாட்டாளிக்கு வேறு விதம் என்று பார்த்து வராது" என்பது உண்மை.

பார்ப்பனர் பிறருக்கு உழைப்பதில்லை என்பது ஓட் டல்கள் வந்த பின்னர் பொய்யாகி விட்டதைத் தாங்கள் அடிக்கடி கண்கூடாகக் காணவில்லையா? அந்தக்குலம் மட்டும் வேறொருவருக்கு உழைப்பதில்லை என்ற கூற்று உண்மையா? பொதுவுடைமைக்காரர்களின் உண்மையை இத்தகைய போலிவாதங்களால் இனவுணர்ச்சியை வளர்ப் பதற்கு உபயோகப்படுத்திக் கொள்ள முடியுமோ? பொதுவுடைமையாளர் உண்மையை மறைத்து நம் கவனத்

தைத் தவறான திசையில் திருப்புவதாய்க்கொள்வது மிகவும் வருந்தத்தக்க உவமையாய் இருக்கிறது. பொதுவுடைமையை எதிர்ப்பதைவிடப் பல அம்சங்களில் அவர்கள் கொள்கையுடன் ஒத்துக்கொள்ளும் தங்கள் தன்மானக் கட்சி, அக்கட்சியுடன் சேர்ந்து உழைக்க ஏதாவது வழி ஏற்பட்டு விட்டால் தமிழ்நாடு விரைவில் முன்னேறும்.

வினரை வீழ்த்துங்கள். உழைப்பாளியைஉயர்த்துங்கள், உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்யுங்கள், மடமையை இடியுங்கள், சமூக சேவையை உயர்த்துங்கள்; ஆனால் கம்பனையும், சேக்கிழாரையும் கருத்தூன்றிப் படியுங்கள். காவியங்களை மதக்கண்கொண்டு பாராது அறிவுக்கண்கொண்டு, ஆராய்ச்சிக்கண்கொண்டு, கலைக்கண் கொண்டு பார்த்துப் பலருக்கும் எடுத்துரையுங்கள். உண்மையைப் போற்றுங்கள், பொதுவுடைமையை நிலை நாட்டுங்கள்; நாட்டுணர்ச்சியை நல்லுணர்ச்சியாக்குங்கள் எதையும் தாங்களே கூறுவதுபோன்று "சிந்தனை செய்து சீர் தூக்கிப்பார்த்து செயலில் காட்டுங்கள்"

26

திரு. நாரண துரைக்கண்ணன் அவர்கட்கு,

காதற்கதைகளில் கைதேர்ந்த கதாசிரியரே,

வாழ்க்கையின் சோகக்குரல்களும், காமப்புயலும், படபடப்பும், துடிதுடிப்பும் தங்கள் உயிரோவியங்களில் படம் பிடிக்கப்பட்டு உணர்ச்சிப்படலமாய் வெளிவந்துள்ளன. விதவையின், ஓலக்குரலும், காமதூதர்களின் கைவசப்பட்டுத் தவிக்கும் பெண்டிரின் அபயக்குரலும் இத்தகைய பிரசங்கடங்களும் தங்கள் நாவல்களை புரட்சிக்கருவிகள் ஆக்குகின்றன. ஆனால் வாழ்க்கையின் ஓலத்தைத்தாங்கள் வரையும்பொழுது, காமத்தின் கோலத்தை

முழுதும் கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளப்பும் வண்ணம் வர்ணித்தல் அவசியம் என்று தாங்கள் கருதுவது தவறு என்று எடுத்துக்காட்டினுல் கோபிக்க மாட்டீர்களென்று எண்ணுகிறோம்.

உயர்தர எழுத்தாளர்களுக்குரிய அம்சங்கள் பல இருப்பினும் இந்தக்காமக்களஞ்சியங்கள் தங்களை கீழுக் கிழுத்துப் பழங்காலக் குப்பையில் தள்ளி விடுகின்றன. ஆகவே தாங்கள் உண்மையில் சமூகத்தின் முன்னேற்றத்தை விரும்பினுல் காமவருணனைகளிலிருந்து தாங்கள் முன்னேறவேண்டும்.

1. எழுத்தாளர்களுக்கெல்லாம் தக்க சன்மானம் அளிக்கவேண்டும், அவர்களை நன்கு ஊக்க வேண்டும் என்று பேச்சு மேடையில் அங்கலாய்க்கிறீர். ஆனுல் தங்கள் ஆனந்தனிலும், விகடனிலும் இதுவரை எழுதிய சிறந்த எழுத்தாளர்களுக்குக் காலணு காசாவது சன்மானமாகக் கொடுத்ததுண்டா?

2. புரட்சிப் பாதையில் ஏன்? முன்னேற்றப் பாதையில் செல்ல விரும்பும் ஒரு சில ஆரம்ப எழுத்தாளர்களிடமிருந்து கட்டுரைகள் வந்தால் அதனை வைரக் குப்பைகளோடு சேர்த்து செப்பனிட்டுத் தக்க முறையில் வெளியிடாமல் —வேண்டாத காகிதக் குப்பையோடு சேர்த்து—ஆரம்ப எழுத்தாளர்களுக்குத் தாங்கள் கூட பட்டை நாமம் சூட்டுவதைக்கண்டு அழுவதா? சிரிப்பதா?

உரிமையோடு எழுதினேம்.

அன்பரே!

இது அன்பு எழுத்து.

அன்பு வாழ்க.

27

திரு. S. S. வாசன், அவர்கட்கு

ஜெமினியின் ஜீவநாடியே,

தமிழகமெங்கும் நகைச்சுவையை பரவச்செய்த தங்கள் பேராற்றலைப் போற்றுதல் எங்கள்கடன். பல்லாயிரக்கணக்கான மக்களை "ஆனந்தவிகடன்" மகிழ்விக்கிறது; ஆனால் பல்லாயிரக்கணக்கான மக்களை அது பந்தயப்பரிசுக்கு ஏங்கவைத்து ஏமாற்றுகிறது.! இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் கலந்தேவரும் என்பதற்கு இது அறிகுறிபோலும்!

சினிமாத்துறையில் தாங்கள் இறங்கியதும் தமிழ்ப்பட உலகம் சீரடைந்துவிடும்என்று எதிர்பார்த்தோம். இங்கும் ஏமாற்றமே கண்டோம், தமிழ்நாட்டு "போர்டு" (Ford) என்றழைக்கப்படும் தாங்கள் பணம் பெறுவதே நோக்கமாய்க் கொண்டால் அதில் பெரிதும் வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்பதில் ஐயமில்லை. தொழிலாளிகளிடையில் தாங்கள் பெயர் பெற்றுள்ளதும் பெரிதன்று. தமிழ் மக்கள் அனைவரிடமும் தங்கள் பெயரும் புகழும் பரவவேண்டும் என்பது எங்கள்பேரவா. உயரிய தமிழ்ப்படம் ஒன்று எடுத்தால் போதும்; தங்கள் பெயர் விண்முட்டும். தமிழ் நாட்டினர் தாழ்ந்த படத்தைத்தான் விரும்புவார்கள் என்பது அதற்குப்பின் பொய்யாகி விடும். அதுவரை முதலாளிகள் பாமரமக்களைப் பழிப்பதும் பத்திரிகையாளர்கள் முதலாளிகளைப் பழிப்பதும் இப்படியேதான் சக்கரம் சுழலும்: ஆகவே படமெடுங்கள்! தமிழ்ப்பட மெடுங்கள்!! நல்ல தமிழ்ப்பட மெடுங்கள்!!' "அத்திம்பேர், அம்மாமி என்னும் தமிழ்தான் மிதம்" என்று கவிஞர்கள் குறை கூறுதபடி உயரிய தமிழ்ப்பட மெடுங்கள்!!!!

28

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, அவர்கட்கு

பாரதிக்கடுத்தபடி தமிழ்நாட்டுப் பெருங்கவியாய் விளங்கும் பெரும்புலவரே,

பாரதியின் பண்பும், பண்ணும் தங்களிடம் கண்டு களிக்க முடிவது உண்மை. ஆயின் அவரது ஆவேசமும் தங்களுக்கு வேண்டும். தங்களது சாந்தம் புத்தர் போதத்தை யொத்து உயர்ந்ததானாலும், தற்காலத்துக்கு அது போதாது. தூங்கிக்கிடக்கும் தமிழனைத்துள்ளி எழச்செய்யவேண்டும்; எழுந்துள்ள தமிழனை தூங்கச் செய்வதே தங்கள் கவித்திறன்? ஆனால், அன்புக்குழந்தைகளுக்கு நீங்கள் ஆற்றியுள்ள தொண்டு சுவையற்றது. சிறுவர்கள் தமிழ் என்றால் இனிப்பு என்று காணச்செய்வீர்கள்! தங்கள் கவித்திறன் மேன்மேலும் சிறுவர்களுக்கு பயனுள்ளதாகப் பரவவேண்டுமென்பது எங்கள்பேரவா.

தமிழ் இசை இயக்கத்துக்குத் தங்களுடையபாடல்களில் சில மிகவும் உதவி செய்துள்ளன என்பது போற்றத்தக்கது. தமிழ்க்கவிக்கு சிவனை அளித்துள்ள தங்கள் தனித்திறத்தின்முன் எந்த யோசனையையும் கூறுவதற்கு நாங்கள் அஞ்சுகிறோம்.

29

கவிஞர் சுரபி, அவர்கட்கு

புதுயுகக்கவிஞரே!

தமிழ் நாட்டில் இன்றுதான் தங்கள் பெருமை தலை காட்ட ஆரம்பித்திருக்கிறது. கல்லூரிப்பட்டத்தையும் கைவிடாது தங்கள் பெயரை ஆங்கில முறையில் ஜே. தங்கவேலன் B. A., என்று எழுதிச் சிறுவர் பாடபுத்த

கங்களில் பாட்டுகள் எழுதி வந்த நாள்முதல் "சுரபியின் கவிதை" என்று விளம்பரம் வரும் இந்நாள் வரை தங்கள் கட்டுரைகளையும், கதைகளையும், கவிதைகளையும் நாங்கள் ஆர்வத்துடன் படித்து வந்திருக்கிறோம். தமிழ்நாடு தாங்கள் ஒரு உண்மைக்கவிஞர் என்பதை இன்னும் உணராதது விந்தையே! கண்டவரெல்லாம் கவிஞராக விளங்கும் இந்நாளில் உண்மைச்சரக்கு தெட்டெனக் கண்ணுக்கு புலப்பட்டது. கவி. தே. வி. க்கு அடுத்தபடி ஏன்; அவருக்கு சமமாகவே; சிறுவருக்கு கவிதை நல்குவதில் தங்களுக்கு இணை தற்காலத்தில் இல்லை. இளம் வயதிலேயே ஊக்கமூட்டும் இத்தகைய கவிகள் மூலம் தமிழுக்குச் செய்யும் தொண்டு சொல்லத்தரமன்று.

கவிதைகளில் மட்டுமின்றி, தங்கள் கவியுணர்ச்சி கட்டுரைகளிலும் காணக்கிடக்கிறது. புத்தகத்துக்குமுன்னுரை எழுதும்போது "மணற்காட்டில் மலர்ச்சோலை" என்றுதான் தங்கள் கவியுள்ளம் தலைப்பிட்டு எழுதத் தலைப்படுகிறது. கவி, ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறைதான் தோன்றுகிறார் என்பது மரபு. ஆகவே தங்கள் பெருமை தமிழ்நாடு உணர இதுவே சிறு விளம்பரமானால் வைரத் தமிழர் என்ற முறையில் நாங்கள் பெரிதும் மகிழ்வோம். பாரதியாருக்குப் பிறகு அந்தப்புரட்சி உணர்ச்சியை பாரதிதாசன் ஒருவரே கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. பாரதி சகாப்தத்திலே பிறந்த தங்கள் கவியுணர்ச்சி பாரதியாரின் உணர்ச்சி வேகத்தைவிட கவி. தே. வி. யின் சாந்தத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பது ஏனோ தெரியவில்லை? தமிழ் நாட்டின் தற்கால நிலைக்குப் புத்தரின் போதமும், ஏசுவின் வேதமும் செய்யக்கூடிய சாந்த சன்மார்க்க நலனைவிட வீர உணர்ச்சியே அவசியம் தேவை.

'பாப விமோசனர்" என்னும் கவியொன்றில் வீர உணர்ச்சியைக் கையாளும் முறையைக் கண்டோம். இத்

துறையில் மேன் மேலும் தங்கள் ஆற்றல் வெளிவருமானால் தங்கள் கவி நலன், உண்மைப்பயன் எய்தும் எனத் தோன்றுகிறது. ஆகவே தாங்கள் கவி...என்பதை தமிழ் நாடு இனி நன்குணரும். தமிழ் நாட்டுக்குத்தக்க கவி, புரட்சி வேகம் பொருந்தியதுதான் என்பதைத் தாங்களும் உணர்விராக.

30

நாமக்கல் கவிஞருக்கு

கவிஞரே,

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்"

என்று அறைகூவி அழைத்துக் கவியுலகில் ஓரிடம் பெற்றுவிட்டீர்கள். அவ்வப்போது சமயத்துக்குத் தக்கபடி "ஆடுராட்டே, சுழன்றுடுராட்டே" என்றும் "ஜெய் ஹிந்த் என்கிற ஜீவ மந்திரம்" என்றெல்லாம் காற்றுள்ளபோதே தூற்றிக்கொண்டு அரசியல் வாழ்விலும், தமிழர் வாழ்விலும் ஒருங்கே முன்னுக்கு வந்து விட்டீர்கள். நன்று; ஆனால், "காந்தியத்துக்குப் பாடுபடுவேன், பாட்டுப்பாடுவேன்" என்ற ஒரே கொள்கையுடன், புதுமையைப் புறக்கணித்துச் சிந்தனையை மழுங்கடித்து, கவிதையை சாதாரணக் கருவியாய்ச் செய்துகொண்டு விளம்பரத்தாலும், தேசிய உணர்ச்சி என்னும் பட்டுப் போர்வையின் மினுமினுப்பினாலும் ஜ்வலித்தல் போதுமா? கவி என்று சொல்லிக்கொள்பவருக்கு அது தகுமா? என்பதை தாங்கள் நன்கு சிந்திக்க வேண்டிய விஷயங்கள்.

தங்கள் கவிகளில் அங்கங்கே சொல்லடுக்குகளையும் சொல் நயங்களையும் கண்டு வியந்தவர்கள் தான் நாங்கள்; ஆனால் இவற்றைவிட ஒரு கவிக்கு, முக்கியமாக, தற்கால கவிக்கு இன்றியமையாத இயல்பு, Originality என்னும் நுண்ணிய சிந்தனா சக்தி. தங்கள் கவிதைகளில் இதைக்

காண முடியாதது ஏன்? "வெட்டிவிட்ட வழியேதான் செல்வேன்; புதுமையைக்கண்டால் எனக்குப் பயம்" என்றுதாங்கள் கூறுவதானால் தமிழ் நாட்டின் தலை சிறந்த கவிஞராய்த்தாங்கள் விளங்கமுடியாது. ஆகவே. இனி யாகிலும் தங்கள் கவிதைகளில் சிந்தனைச் செறிவும் புத்துணர்ச்சியும் காணக்கிடைக்குமாக!

31

புரட்சிக்கவி—பாரதிதாசன் அவர்கட்கு

புதுயுகத்தில் பூத்த புரட்சிக்கவி மலரே.

மலரின் மென்மைக்கும் தங்கள் வீராவேசத்தின் எழுச்சிக்கும் பொருத்தமில்லை யெனத் தோன்றலாம்! ஆயினும், மலரினும் இனிய தங்கள் கவிநயத்தைக் காணு மிடத்து வேறு அடைமொழி இட்டு விளிக்க மனம் வர வில்லை.

உண்மையில் பாரதி சகாப்தத்தில் தோன்றி, பாரதி யார் தொடங்கிய பணியைத் தொடர்ந்து நடத்தும் கவி தாங்கள் ஒருவரே என்பதில்ஐயமில்லை. பாரதியார் எல்லா தெய்வங்களையும் தொழுபவர்! தாங்களோ தெய்வமொன் றில்லை யென்று சாதிப்பவர்! பாரதியார் பார்ப்பன குலத் தில் தோன்றியவர்! தாங்களோ அக்குலத்துக்கு எதிரி யெனப்பெயர் ! பெற்றவர் பாரதியார் மிகவும் இளநெஞ் சுபடைத்தவர்! தாங்களோ வைர நெஞ்சுபடைத்தவர்! வைரம்பாய்ந்த உறுதிகொண்டவர். இருந்தும், பாரதி யாருக்கு உண்மைப் பிரதிநிதி தாங்களே என்றால் இதில் உள்ள மகத்தான விசேஷங்களை மக்கள் இனியும் மதியா திருப்பது பேதைமை.

கொள்கையும் நம்பிக்கையும் காலத்துக்கேற்ப மாற வேண்டியதவசியம்.

பாரதியார் காலத்தில் அல்லாவையும், ஏசுவையும் பற்றிப் பாடும் பார்ப்பான் பைத்தியமெனதான் மதிக்கப்

பட்டிருப்பான். அதேபோல் இக்காலத்தில் நாத்திகமென்ருல் மக்கள் 'அம்மம்ம' என்று அலறுகிருர்கள். நாங்கள் நாத்திகரல்லாதபோதும், நாத்திகத்தைக் கண்டு நடுங்கும் இயல்புபடைத்ததில்லே. ஆகவே, தங்கள் கொள்கையைக் குறை கூற நாங்கள் முன்வரவில்லே.

இருதுறைகளில் தங்களே முக்கியமாக பாரதியாரின் அவதாரம் என்றே நாங்கள் கருதுகிருேம். காதல் துறையில் கவிதைகள் இயற்றுவதில் பாரதியாரையும் தாங்கள் மிஞ்சி இருக்கிறீர்கள்.

"பார்த்துப்பறித்த தாமரைப்பூத் தீர்த்து விலேக்குக்
கொடடி என்றேன்
பூத்த முகத்தாமரையால் புதுமைகாட்டி மயங்கி
நின்றுள"

என்பது போன்ற அடிகளேப் படித்து மயங்கி நிற்காமல் வேறென்ன செய்ய முடியும்?

காதலுக்கடுத்தபடி பாரதியாரின் வீராவேசம் தங்களிடம் புத்துயிர் பெற்று பல இடங்களில் துள்ளி எழுகிறது. தாலாட்டுப் பாட்டில்கூட

"மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடுமணக் கவரும் கர்பூரப் பெட்டகமே"

என்று நெஞ்சு பொறுக்காது கோபம் பொங்கி எழுகிறது. காதலுக்குப்போடும் கட்டுப்பாடுகளேக்கண்டு சீறி எழுந்து.

"காதலிருவர்களும்—தம் கருத்தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் என்?—இதில் மற்றவர்க்கென்ன உண்டு
சூதுநிறைஉலகே—எதுட்ட இருட்டறையே!"

என்று பாடும்போது சபாஷ் போடத்தான்தோன்றுகிறது. ஆனல், ஒரு விமர்சகர் சொன்னதுபோல 'பூசனிக்காய் மகத்துவம்' முதற்கொண்டு 'கர்ப்பத்டை' வரையில் எல்லாவற்றையும் பாடித்தீர்க்க முற்படுவதுதான் தங்கள்

பெருந்தவறு என்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம், தங்கள் புரட்சி வேகத்துக்கும், குழந்தைப் பகுதிப்பாடல்களுக்கும் வெகுதூரம் அதில் முயன்றால்,

"குளிர்வாழைப்பூக்கொப்பூழ் போன்ற
ஒளி இமைவிலக்கி வெளிப்படும் கண்ணால்
முது வையத்தின் புதுமைகண்டதோ
என்னமோ அதனை எவர்தாம் அறிவார்?"

என்பதுபோல் சப்பென்ற வசனங்கள் தான் பாடல் போல் வெளிவரவேண்டும். இப்பணியைத் தாங்கள் கவிஞர் தே. வி. அவர்களுக்கே விட்டு விடுதல் நலம்.

சினிமாத்திரையின் சீர் கேடுகளைக் கண்டித்த தாங்கள் அட்டைமூடி, அநேகமனைவிகள் முதலிய பலகோளாறுகள் கொண்ட படத்துக்கே "அத்திம்பேர்-அம்மாமித்தமிழ்" இல்லாவிடினும், தெய்வபக்தி ததும்பும் வசனங்கள் எழுதித்தந்துள்ளது வியப்பை அளிக்கின்றது. இச்செயலைப் போற்றித் தங்களை ஆத்திகர் கூட்டத்துள் அறைகூவி அழைக்கவும் மனம் எழவில்லை. இதைத்தூற்றிக்கூறவும் இயலவில்லை. கொள்கைகள் மாறுபடலாம்; ஆனால் இம்மாறுதல் குறைவுக்கு அறிகுறி என்றே தோன்றுகிறது. இன்னும் எவ்வளவோ செய்யக்கூடியவர், எளியவர் குரலுக்கு எழிலளித்து விளங்கச் செய்யும் பணி உமதே. அதைச்செய்ய முன்வாரும்; ஆனால் வெறுப்புணர்ச்சி மட்டும்வேண்டாம், வேண்டாம்!

மற்றபடி தங்களைக் குறைகூற நாங்கள் விரும்பவில்லை. சுயமரியாதைக் காரரான தங்களுக்குக்கோபம் வந்தாலும் சரி, தங்களை நாங்கள் பாரதியாரின் அவதாரம் என்றே கொண்டாடித்திருவோம்.

32

திருமதி E. T. இராஜேஸ்வரி அம்மையார் அவர்கட்கு

சைவசித்தாந்த மரபும், விஞ்ஞான விளக்கமும் ஒருங்கே திரண்டு விளங்கும் தமிழ்த்தலைவியாரே,

காணாத காட்சி, கேளாத ஒலி, நுகராதவாசனை முதலிய அரும்பெரும் தத்துவங்களை, கைவல்யத்திலும், குறிஞ்சிப்பாட்டிலும் எடுத்துப்பிழிந்து தரும் ஆற்றல் பெரியார் திரு வி. க. வுக்கு அடுத்தபடி தங்களிடம் தான் காணவேண்டும். பெண்டிர்பட்டம் பெறுவதே அரிதாயிருந்த காலத்தில் விஞ்ஞானபட்டம் பெற்றதோடல்லாமல் ஏனைய ஆசிரியர்கள் போல் "நாமுண்டு-நம் கல்லூரி உண்டு" என்றிருக்காமல் அறிவியல் ஞானத்தை அனைவரிடையும் பரப்பத்தங்களால் இயன்ற தொண்டு செய்து வருதல் போற்றுதற்குரியதே!

ஆனால் விஞ்ஞானத்தைப் பரப்பும் ஆவல் சிலசமயம் அளவுமீறியும் வளர்ந்து விடுகிறது என்பதற்கு "ஐன்ஸ்டீன் கண்ட காட்சி" ஒரு சான்று என்றே எண்ணுகிறேம் ஐன்ஸ்டனுடைய தத்துவங்களை ஆங்கிலத்திலேயே இன்னும் அநேக விஞ்ஞானிகள் சரியாக உணரவில்லை, தமிழில் யாருக்குப்புரியும்?

விஞ்ஞானத்தில் அதிக ஞானமில்லாத எங்களைப் போன்றவர்களுக்கு அவை ஒரே குழப்பம் தான் அளிக்கின்றன. அதுவும் தமிழில் படிக்க ஆரம்பித்து விட்டால் தலைநோவுதான் தரும்போல் தோன்றுகிறது. புரியாத தத்துவங்களை தெரியாத சிலருக்கு எடுத்துக்கூறுவதைவிட விஞ்ஞானத்தில் வரும் பல அரிய எளிய தத்துவங்களை அனைவரும் அறியும்படி எடுத்து எழுதினால் தமிழருக்குத் தாங்கள் பெருந்தொண்டு செய்தவராவீர். விஞ்ஞான விஷயங்களைப்பற்றி எழுதும் பெண்மணி

தாங்கள் ஒருவரே, ஆதலால் தங்களுக்கு இந்தத்தனி வேண்டுகோள் விடுக்கிறோம். மற்றொன்று, அறிவியலில் ஆழ்ந்து திளைத்த தங்கள் மனம் சைவத்திலும் ஒருங்கே ஈடுபட்டிருப்பது விந்தையே!

இவ்விரண்டையும் ஒன்று சேர்க்கும் சாமர்த்தியம் பாராட்டுதற்குரியது. தெய்வத்திரு. வி. க. சார்பாக உங்களைப் பாராட்டுகிறோம்.

33

திருமதி. குமுதினி அவர்கட்கு,

'குமுதினி'யைத் தமிழுக்களித்த குமுதினி அம்மையே,

தங்களைப்போல் வடமொழியிலிருந்தும், ஆங்கிலத்திலிருந்தும், பிறமொழிகளிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்துவிசித் திடுக்கிடவைக்கும் ஆற்றல் எங்களுக்கில்லை. தமிழகத்திலே கட்டுரைத்துறையில் கை தேர்ந்தவர்கள் வெகு சிலர்; அதிலும் பண்டைத்தமிழ் இலக்கியத்திலிருந்து பாட்டும் கதையும் எழுதித்தள்ளி "இதோ கட்டுரை" என்று விளம்பரப்படுத்துதல் தான் இன்று வழங்கிவருகிறது. இந்நிலையில் ஆராய்ச்சிக்கும், சிந்தனைக்கும் விருந்து நிறைந்த தங்கள் கட்டுரைகள் இன்று அதிகமாய்ப்பரவா விட்டாலும் எதிர் காலத்தில் நல்லபெயர் பெறும் என்பதில் ஐயமில்லை. ஆனால் தங்கள் கட்டுரைகளில் மிளிரும் அறிவுக்குவியலைக்கண்டால் அடிக்கடி அச்சம் தான் அதிகரிக்கிறது; இருந்தும் தாங்களே தங்களை 'ஒரு புத்தகப் புழு' என்று அழைத்துக்கொள்வதால் இது தங்களை அச்சுறுத்தாது என்று எண்ணுகிறோம்.

தாங்கள் படித்த விஷயங்களை, இவ்வளவு படித்திருக்கிறீர்களா! என்று பிரமிக்க வைக்காமலே விஷயங்களை மட்டும் விளங்க வைத்தால் தங்கள் கட்டுரைப்பண்பு பண்-பட்டதாகும். எத்தனையோ படித்த தாங்கள் இதையும் படித்து உணர்வது அறிதல்ல.

34

திருமதி. குகப்பிரியை அவர்கட்கு,

மறுமலர்ச்சி இயக்கத்தில் பூத்த முதல் மலரே,

"வாழ்க்கையை ஒட்டிய நாவல்கள் தமிழில் கிடையாது" என்ற குறையை தங்கள் பரிசு நாவலான "சந்திரிகை" நீக்கிவிட்டது. வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நாவல் வேண்டுமென்ருல் திரும்பத் திரும்பத் தமிழருக்கு வேதநாயகம் பிள்ளையின், "பிரதாப முதலியார் சரித்திரமும்", B. R. ராஜமய்யரின் "கமலாம்பாள் சரித்திரமும்" தான் மேற்கோளாக வழங்கிவந்தன. ஆனல் தங்கள் சந்திரிகைக்குப்பின் தமிழர் முயற்சி வளம் பெற்று இன்று பல நாவல்கள் தமிழர் வாழ்க்கையை ஒட்டி வெளிவந்து விட்டன. இத்துறையில் முதன்மை பெற்ற தங்களை தமிழகம் என்றும் மறக்கலாகாது.

சிறு கதைத்துறையிலும், தாங்கள் சிறந்து விளங்குகிறீர்கள். ஆனல் கதையைத்தவிர வேறு துறைகளில் தங்கள் திறன் பயனுகக்கூடாது என்று மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் எண்ணுவது ஏனே தெரியவில்லை. அதற்கேற்ற ஆற்றல் படைத்த தங்களைப்போன்றவர்கள் அத்துறைகளில் உழைத்தால் தமிழ்வளம் பெறும் என்பது எங்கள் யோசனை. கவனிக்கவும்.

35

திருமதி, தங்கம்மாள் பாரதி அவர்கட்கு.

புரட்சிக் கவிஞரின் புதல்வியே,

உலக மகாகவி பாரதியாரின் வாழ்கை வரலாற்றை எடுத்துரைத்து தமிழ் இலக்கியத்தில் ஓர் இடம்பெற்று விட்டீர்கள். தங்கள் கட்டுரைகளில் தந்தையாரைப் பற்றியே அடிக்கடி எழுதினுல்தான் தமிழர்கள் ரசிப்பார்கள் என்று தாங்கள் நினைப்பதுபோல் தோன்று

கிறது. ஆனால் தங்கள் குடும்பத்துக்குள்ளே இலக்கியத் துறையில் அதிகமாய் ஈடுபட்டிருப்பது தாங்கள்தான் என்பது தெளிவு. ஆதலின் தந்தையைப்பற்றி மட்டுமல்லாமல் பிற துறைகளிலும் மேலும் மேலும் எழுத முற்படுவீர்களென்று எண்ணுகிறோம்.

தந்தையாரைப்பற்றித் தாங்கள் தரும் குறிப்புகளைப்பற்றி சில வார்த்தைகள்;—தாங்கள் தரும் பல குறிப்புகளைப்படிக்கும் தமிழர்கள் பாரதியாரா இப்படிச் செய்தார்! என்று வியப்பதுதான் இயல்பு. பாரதியார் மேதை; ஞானி; உயரிய தத்துவங்களுக்கு உறைவிடம். அத்தகையோரை அவர் குடும்பத்தில் உள்ளவர்கள் சரியாய் உணர்ந்தார்கள் என்று சொல்லமுடியாது. கீரைத்தண்டு சுமைவாங்கியதும், கழுதைக்கு முத்தமிட்டதும்தான் குடும்பத்தினருக்குத் தெரிந்த பாரதியாராக இருந்தால் அவரது பெருமைகள் வெளிவராதிருத்தல் நலம். ஆகவே பாரதியார் குடும்பத்தில் பிறந்த பாக்கியத்தைக்கொண்டு அவரிடம் இருக்கும் மதிப்பை மேன்மேலும் குறைக்க முயற்சி செய்யவேண்டாம் என்பதே எங்கள் வேண்டுகோள்;

எங்கள் கடுமையை மன்னிக்கவேண்டும். பாரதி உணர்ச்சி என்ற ஆவேசம் எங்களை உந்தித்தள்ளுகிறது. மேலும் தமிழ் உலகில் கட்டுரைகளும் எழுதிப்பழகிய தாங்கள் இங்ஙனம் சொல்வதா, என்ற உரிமை பற்றியே கூறினோம்.

36

திருமதி - வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் அவர்கட்கு.

அருங்குணம் வாய்ந்த அருமைச் சகோதரியே, வணக்கம்.

தமிழ்க் குடும்பத்திலே தோன்றி தமிழ்த்திருத்தொண்டு செய்யும் தங்கள் தொண்டைக் கண்டு எங்கள் மனவண்டு களி துள்ளுகிறது.

சிலப்பதிகார மாதவி, சிந்தாமணியின் காந்தருவதத்தை முதலிய நல்லிசை மெல்லியலார் எழுதிய இலக்கியக் கடிதங்களின் நடங்களைத் தமிழுலகிற்கு எடுத்துக்காட்டிய தங்களுக்குக் கடிதம் எழுதவும் பயமாயிருக்கிறது. திரு.வி.க வின்வாரிசைப்போல் பெண்ணுலகுக்காகத் தாங்கள் வரிந்து கட்டிக்கொண்டு பேசினால், ஆணுலகு நாதியற்றுப்போக நாங்கள் விட்டு விடுவோமா? எனவேதான். ஆண்மக்களும் கடிதங்கள் வரைவதில் சளைக்காதவர்; என்று காட்டவே இத்திருமுகம் விடுக்கின்றோம்.

எங்கேயோ ஒரு வீட்டுக்குள் மறைவிலிருந்த தங்களை அந்த 'இந்தி எதிர்ப்பு' இயக்கம் திடீரென்று அம்பலத்துக்குக் கொண்டு வந்துவிட்டது. 1938ல் சென்னைப் பெண்கள் மாநாட்டில் தாங்கள் நிகழ்த்திய வீரச்சுவை பொருந்திய வரவேற்புரையும் 'புனிதவதி' என்னும் சிறுகதைப் புத்தகமுந்தான் அக்காலத்துத் தமிழ்ப் பெண்களைச் சிறைக்கனுப்பியது என்று சொன்னால் அது மிகையாகாது. உண்மை, இப்படியிருக்க பாவம், அந்த கிழவர் ஈ.வே.ரா. மீது வழக்குத் தொடர்ந்து அவரைச் சிறைக்கனுப்பிற்று, அக்காலத்திய காங்கிரஸ் சர்க்கார். பழியோரிடமிருக்கப் பாவம் ஓரிடமாயிற்று.

இப்போது அவைகளையெல்லாம் மறந்துவிட்டுப் பண்டைச் செந்தமிழ் நூல்களில் நயங்காட்டிக் கட்டுரைகள் எழுதும் பணியில் ஈடுபட்டிருக்கிறீர். இது நல்லதே. ஆமாம், சாதாரண பாடல்களுக்கெல்லாம் பெரிய பெரிய நயங்கள் காட்டும் திறத்தினை எப்படிப் பெற்றீர்கள்? எவரிடம் கற்றீர்கள்?

தங்களுடைய தமிழ் நடை ஒரு தனி ரகமாகத்தானிருக்கிறது. பழமையும் புதுமையும் அதில் மனோகரமாக கலந்து மணம் வீசுகிறது. ஒருபுறம் மறைமலையடிகள், திரு.வி.க. நடையையும், மற்றொரு புறம் டி. கே. சி.

'கல்கி' போக்கையும் உங்கள் தமிழ் நடையில் காண்கிறோம். இது ஒரு அலாதி இன்பத்தைத்தான் கொடுக்கிறது

தங்களுக்குப் பெற்றோரிட்ட ஏதோ ஒருவடமொழிப் பெயரைத் தமிழார்வம் காரணமாக வீசியெறிந்து விட்டு, "தாமரைக்கண்ணி" என்று புதுப்பெயர் வைத்துக் கொண்டதாங்கள், இப்போதெல்லாம் தங்களுடைய கட்டுரைகளில் சம்ஸ்கிருதச் சொற்றொடர்களைத்தாராளமாகப் துவது விந்தையிலும் விந்தையே! இப்படிச் சொல்வதனால் வடமொழிக் கலப்பை நாங்கள் எதிர்க்கிறோம் என்று நினைத்து, தூய தமிழ்' என்னும் உச்சாணிக்கிளையில் ஏறி உட்கார்ந்துக் கொள்ளவேண்டாம். கூடவேகூடாது. தாங்கள் இப்போது பின்பற்றும் போக்கே மிக மிக நன்றாகயிருக்கிறது. வடமொழிக்கலப்பை ஓரளவுக்கு மேல் மிஞ்சவிடவேண்டாம் என்பதே எமது வேண்டுகோள்.

தமிழ்நாட்டுப் பெண்மணிகள் அடுப்பங்கரைப் பூச்சிகளாய் இல்லாமல் தங்களைப்போன்று நாடோங்க, வீடோங்க, நலமோங்க தொண்டு செய்யவேண்டும்.

தங்களைப்போன்ற அருமைச் சகோதரிகளால் நமது ஒப்பற்ற தமிழர் கூட்டம் மல்குக.

37

கர்னல் - லட்சுமி அவர்கட்கு

வீரத் தமிழ்மாதரசியே! ஜெய்ஹிந்த்!

வீர வெறிகொண்டு நிற்கும் இந்தியப் பெண்மணிகளின் செங்கமலக்கண்களுக்கு ஞான வொளியையும், இருதய பீடங்களுக்குக் கட்டுப்பாடுடன் கூடிய விடுதலை உத்வேகத்தையும் ஆவேச உணர்ச்சியையும் அளித்தீர்கள். அது மட்டுமா?

பாரத ராணியின் கழுத்தையும், கை கால்களையும் நெருக்கிக்கொண்டிருக்கும் அடிமைச் சங்கலிகளெல்லாம்

படீர் படீரென்று தெரிப்பதற்குக் காலம் நெருங்குகிற தென்று தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் எதிரொலிக்கும்படி செய்தீர். அது மட்டுமா!

உலகெங்கும் பெண்ணின் பெருமையை நிலைநாட்டி வீரக்கொடி பறக்கவிட்டு பாரத தேசத்தின் பெருமையைக் காக்க முன் வந்த தங்களுக்கு நாங்கள் அதிகமாய் எழுதக்கூடுவது ஒன்றுமில்லை.

தமிழ் நாட்டில் தங்கள் செயலின் திறனைக் கண்டு புகழ்ந்தோம்! தமிழ் நாட்டில் தங்கள் பேச்சுத் திறனைக் கேட்டும் மகிழ்ந்தோம். "பேசத் தெரியாது" என்ற முன்னுரையுடனே பல மேடைகளில் பேசிப் பேசிப் பழகி விட்டீர்கள். இனி தமிழரிடையே தாங்கள் வாழ்வதால், மதுரையில் செய்ததுபோல் "தமிழில் பேசத்தெரியாது" என்ற அடைமொழியுடன் தமிழிலேயே பேச ஆரம்பித்து வீரத் தமிழருக்கும் தங்கள் வல்லமையைக் கண்டுகளிக்க சந்தர்ப்பம் அளிப்பீர்களென்று நம்புகிறோம்.

சென்னை திரும்பிய ஜோரில் இருந்த ஆர்வம் இன்று மங்கிக் கிடப்பதேன்? புதிய மணவாழ்க்கையில் சற்று மறந்திருக்கிறீர்களா? அல்லது நாட்டினிடத்திலேயே ஊக்கம் குன்றிவிட்டதா? அறிய ஆவல். ஜெய்ஹிந்த்!

38

இசைவாணி M. S. சுப்புலட்சுமி அவர்கட்கு

தன்னிகரில்லாத் தனிப்புகழ் பெற்ற தண்டமிழ் இசைவாணியே,

தமிழ் இசைக்குத் தாங்கள் செய்துள்ள தொண்டு தனிப்பெறும் சிறப்பு வாய்ந்தது. இசை உலகில் உள்ள குழப்பங்களிடையே கொள்கையைக் கடைப்பிடித்து தமிழ் இசைக்காகத் தாங்கள் செய்துள்ள போராட்டம் தமிழர் நன்றிக்குரியதாகும்.

தேசீயநிதிகளுக்கும், பிற பொது ஸ்தாபனங்களுக்கும் தாங்கள் இசைக் கச்சேரிகள் நல்கியது நல்ல தொண்டாகும். ஆயின் அந்தத் தொண்டுகள் பேராலும் நிதிகள் பேராலும் சுரண்டப்பட்ட மக்களை எண்ணிப் பார்க்கில் கோடமே மேலிடுகிறது. வரவர, தங்கள் கச்சேரிகளுக்கு கடைசி கட்டணம் 10 ரூபா என்று ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறோம்.

தமிழ் நாட்டின் பொருளாதார சக்தியை நினைக்குங் கால் தமிழருக்கு இசைக் கச்சேரி கேட்பதே ஒரு உயர்ந்த செலவாகும். அதுவும் தங்கள் கச்சேரி என்றாலோ கேட்க வேண்டியதில்லை; அப்படியும் பலர் கட்டணம் தருகிறார்கள், அதற்காக என்னபொருளும் செலவு செய்யச் சித்தமாயிருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அதற்காக அவர்களை சுரண்டுதல் நியாயமாகுமா? என்பதை எண்ணிப் பாருங்கள். எப்படியும் இடவசதிக்குத் தக்கபடி தான் டிக்கட்டுகள் வழங்கப்படுவதால் எளிய கட்டணங்கள் வைப்பதனால் இடையூறு ஏற்படும் என்னும் கூற்று பொய்யாகும். ஆகவே தமிழ் நாட்டு ஏழைகளும் தங்கள் இசையைக் கேட்டு இன்புற வழி செய்வீர் என்று நம்புகிறோம். மேலும் தற்காலத்தில் வட நாட்டிலும் பிற நாட்டிலுமே அதிகப்படி கச்சேரிகள்செய்வது என்றபழக்கம் தமிழர் பெருமையைப் பிறருக்குப் எடுத்துக் காட்டிய போதிலும், நாளடைவில் தங்கள் தமிழ் இசைக் கொள்கையை அது தகர்த்து விடுமோ என்றும் அஞ்சுகிறோம். வட நாட்டாருக்கு அந்நாட்டு இசையேதான் ஏற்றதாகும் என்பது மறக்க முடியாது. இதைக் கொஞ்சம் உன்னிப் பாருங்கள்.

39

ம. பொ, சிவஞான கிராமணியார் அவர்கட்கு

அரசியிலில்ஆவேசமும், இலக்கியத்தில்ஆர்வமும்கொண்டு 'தமிழ் முரசு' கொட்டும் வீரச்சிங்கமே!

தங்கள் தமிழன்பு சென்னையிலுள்ள மூலை முடுக்குகள் முற்றிலும் தங்கள் வீரப்பிரசங்கங்கள்மூலம் பரவியிருக்கின்றது. மற்ற அரசியல் தலைவர்கள் போலல்லாது, இலக்கியத்திலும் தாங்கள் ஆர்வம் கொண்டுள்ளீர்கள். இதோடுமட்டுமிருந்தால் பரவாயில்லை. ஆனால் இதற்கு மேல் ஒருபடிபோய் இலக்கியத்திலும் பழமையை ஒழிக்கும் தொழிலில்லாத வாதங்களுக்கு முற்பட்டு விட்டீர்கள்

போலி நம்பிக்கைகளையும், மூடப் பழக்கங்களையும் கண்டித்துப் பேசும்பொழுது சுயமரியாதை வீரர்களில் தாங்கள் ஒருவரோ என்று ஐயம் கூட ஏற்பட்டு விடுகிறது. அப்படியிருந்தும் தாங்கள் தற்கால நாகரிகத்தைப் பின்பற்றிச் சிலப்பதிகார ஆராய்ச்சி ஒன்று வெளியிட முன்வருவதைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. பெரிய மனிதர்களெல்லாம் ஓய்வு நேரத்திற்குச் சுலபமானவேலையென்று "வியாசர் விருந்து" "சிலப்பதிகாரத்துக்குப் புதுவுரை" என்றெல்லாம் சதாரண மொழி பெயர்புத் தொழிலில் இறங்குவதுபோல் தாங்களும் இறங்கிவிடப்போகிறீர்களோ என்று அஞ்சுகிறோம். ஆனால் புத்தகம் வெளிவருமுன் தீர்ப்புகூற நாங்கள் யார்?

தங்கள் முதல் இலக்கியத்தொண்டு முதன்மையான இலக்கியத்தொண்டு என்பதில் ஐயமில்லை. "கப்பலோட்டிய தமிழன்" பெருமையை நாடறிய செய்த பணி அரும்பணி! பெரும்பணி! அவசியமானபணி. பெரிய மனிதர் வரலாறுகளைக் குடும்பத்தினர் எழுத முற்படும்

பழக்கம் துரதிர்ஷ்ட வசமாய் நம் தமிழ்நாட்டில் பரவி வருகிறது.

பாரதியார் கழுதைக்கு முத்தம் கொடுத்ததையும், ஒரு ரூபாய்க்குக் கீரைத்தண்டு வாங்கி வீடு நிறைய பரப்பிய ஃதயும் படித்து 'மகிழ்ந்த, நாம் வ. வு. சி. யைப்பற்றி சுப்பிரமணியனர் என்ன கூறுவாரோ என்று அஞ்சத் தான் வேண்டியிருக்கிறது. அடுத்தாற்போல் டாக்டர் வி வி. எஸ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், வ. வே. சு. ஐயர் சரித்திரத்தை எழுத முனைந்தாலும் ஆச்சரியமில்லை. ஒரு பெரியாரைப்பற்றி மற்றொரு பெரியார் எழுதும் வரலாறே சாலச் சிறந்தது என்ற கொள்கையில் நாங்கள் தங்கள் புத்தகம்போன்ற பலவரலாறுகள் வெளிவர வேண்டுமென்று விழைகிறோம்.

தன்னலமே பெரிதெனக் கருதாது சமத்துவக் கொள்கையோடு உழைக்கும் உழைப்பை நாங்கள் மனமுவந்து பாராட்டுகிறோம். எல்லாவற்றையும்விட எங்கள் பாராட்டு தாங்கள் வெளியிடாத புத்தகத்துக்காகத்தான்! இதைத் தாங்கள் இனியும் வெளியிடமாட்டீர்களென்று நம்பியே இப் பாராட்டை அளிக்கிறோம்! "எனது சிறை வாச அநுபவம்" என்பதுபோன்ற நகைச்சுவைத்ததும்பும் வரலாறுகளைத் தயவுசெய்து வெளியிடாதீர்கள். தமிழுலகம் தங்களைப் பெரிதும் எதிர்பார்க்கிறது! முனைந்து முன்னேறுங்கள். வீரமீசையை முறுக்குங்கள். தமிழரசைக் காண முந்துங்கள். தோள்கள் விம்மச் செந்தமிழால் வாழ்த்துகிறோம்.

வந்தேமாதரம்!

40

நவாப் T. S. ராஜமாணிக்கம் அவர்கட்கு

நாடக உலகின் நவாப் ராஜாவே!

பேசும்படம் தோன்றி நாடகத்தைக் கெடுத்து விட்டது என்னும் குறையைத் தீர்த்து வைத்த புண்ணியம் தங்களையே சாரும்.

ஆர்மோனியக்காரருடன் சண்டைப் போட்டுக் கொண்டு பாட்டுப்பாடுவதுதான் நாடகம் என்றநிலைமை, காலம்சென்ற கன்னையா கம்பெனியாரால் மாறிற்று. மக்களும் ராவணன் வேஷம் போட்டவனை "ராம நீசமான மெவரு" பாடச்சொல்லி கலாட்டா செய்வது தவறு என்று உணரும் நிலைக்குக் கல்வி பெற்று விட்டனர். இருந்தாலும் போட்டாப்போட்டி கோவலன், சதாரம், முதலிய தொல்லைகள் நடந்த வண்ணம் இருந்தன. இதையெல்லாம் ஒழித்து நாடகத்தில் பல புதுமைகள் புகுத்தி "டர்னிங்சீன்கள்" என்று இருட்டடிப்பில் மகத்தான மாறுதல்கள் செய்து மக்களை மகிழ்வித்தீர்கள். சினிமாவைப்போல் நாடகங்களிலும் மக்கள் ஆர்வம்கொள்ள ஆரம்பித்தனர்.

புதுமையைப் புகுத்தி ஆர்வத்தை ஊட்டிய பின்னர் தங்களைப் பலர் பின்பற்ற ஆரம்பித்தனர். ஆனால் புதுமையில் மட்டும் தங்களைப் பின்பற்றி, நடிப்பு முதலிய அம்சங்களை அவர்கள் கைவிட்டுவிட்டனர். இந்நிலையில், நாடகமேடை வளர்ச்சியடைகிறது என்று சொல்ல முடியாதுபோய்விட்டது.

ஆனால், இது தங்கள் தவறல்ல என்பதை உணர்கிறோம். தங்களுடைய நாடகங்களிலும் தாங்கள் நடிக்காத நாடகங்கள் அவ்வளவாகச் சோபிப்பதில்லை. இதற்கு முக்கியமான காரணம் நடிப்பைவிடக் காட்சி அலங்காரங்களில் அதிக கவனம் செலுத்தப்படுவதுதான் என்று

தோன்றுகிறது. தாங்களும் தங்களைப் பின்பற்றும் பலரும் இதை அவசியம் கவனிக்கவேண்டும்.

நாடகம் நடத்தும் தங்களைப்போன்றவர்கள் நல்ல நாடக இலக்கியத்திலும் கவனம் செலுத்தினுல் அழகிய வசனங்கள் அமைந்த நாடகங்கள் பெருகித் தமிழ் இலக்கியம் பெரிதும் வளம்பெறும். நாடகத் துறையில் தமிழ் இலக்கியம் முதற்படி கூட ஏறவில்லை என்றே கூறவேண்டும். தங்களைப்போன்றவர்கள் அன்பும் ஆதரவும்தான் இப்பெரும் குறையைத் தீர்க்கவேண்டும். சலாம்!

41

புலவர்மணி ே.தே. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்கட்கு

பட்டங்கள் பல பெற்று இன்னும் பெறுவதற்குப் பட்டங்கள் இல்லையே என ஏங்கித் தவிக்கும் வீரத்தமிழ் மகனுரே,

பல்கலைக் கழகத்தில் பேசும் வீரப் பேச்சாயினும் சரி; தமிழ்ச் சங்கங்களில் பேசினுலும்சரி; பாமர மக்கள் கூட்டத்தில் பறக்க விரிக்கப் பேசினுலும் சரி; தங்கள் பொன்னுன பேச்சில் பஞ்சத்தையும் பட்டினியையும் காண்கிருேம். ஹா! விறகுப்பஞ்சம், ஹா! கட்டைப் பஞ்சம், ஹா! அரிசிப்பஞ்சம் என்று சோகக் குரலில் தாங்கள் ஓங்கிக் கூவும்பொழுது எங்கள் தமிழ் உள்ளம் கண்ணீர் விட்டழுகிறது,

ஹா! ஒரு ஓட்டைக்குடிசையில் ஒன்பது பேர் என்றெல்லாம் தாங்கள் கூறும்பொழுது கன்னெஞ்சமும் கரையாமலா போகும்!

"பஞ்சிலாடையும் பட்டிலுடையும் பார்முழுதுமளித்த நாட்டிலே மானத்தை மறைக்க முழுத்துணியின்றித் திண்டாடும் திகம்பரர் எத்தனை? ஹா! பாலும்

நறவும் பலவகைத் தானியங்களும் பிறநாடுகளுக்கு ஏற்றி பல கோடிக்கு உணவளித்த உத்தம தேசத்திலே கள்ளிப் பழத்திற்கும் சுள்ளி விறகுக்கும் தகராறுகிக் கிடக்குதையோ!'' என்று தாங்கள் ஏங்கும்போது, தாங்கள் ஏன் பொதுவுடைமைக் கட்சியில் ஒருவராக இருக்கக் கூடாது என்று கேட்கத் தோன்றுகிறது.

42

திருமிகு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கட்கு

ஆசிரியர் ; தமிழர் நாடு
திருச்சி

அன்பு மணியாகிய ஐயனே!

நன்றி கனிந்தவணக்கம். உடம்புகவனம். தாங்களோ பெரியோர்; மிகப்பெரியோர்; பெருமைக்குத் தக்க அறிவு; அறிவுக்குத் தக்க பொருட் செறிவு; செறிவுக்குத் தக்க சொல்தெளிவு; இப்படியிருக்க தாங்கள் தமிழில் ஒரு புத்தகமாவது எழுதாதது ஏனோ?

தமிழ்நாடு தங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை.

கோணல் எழுத்தென்னும் அந்த ஆங்கிலம் படியாமலே தமிழில் சட்டதிட்டமாகப் பேசுகிறீர். ஆங்கிலம் படியாமல் தமிழிலும் அப்படிப் பேசமுடியும் என்பதற்கு தாங்கள் ஒரு எடுத்துக்காட்டல்லவா?

சங்கநூல்களை சங்கையறக் கற்று தமிழ்ச்செல்வத்தை அள்ளி வீசும்பொழுது எங்கள் நெஞ்சையும் அள்ளுகிறது. புண்பட்ட மனமுடையோனும் பண்பட்ட மனமுடையவனுகிருன்.

நாட்டுப் பற்றுகொண்டு வீறிடும் இளந்தமிழர்களின் உணர்ச்சி வெள்ளம் உடைபட்டுப் போகாமல் நல்வழி

களில் செலுத்தப்படவேண்டுமென்பதற்காகத் தாங்கள் பாடுபடுவது நல்லது.

தங்களைப்போன்ற தமிழுருவாகிய தலைவர்களால் தான் தமிழ் இளங்காளைகளை, வெல்ல முடியாத வீரர் களடங்கிய சேனையாக உருவாக்க முடியும். இதை இன்றே, இப்பொழுதே செய்ய ஆரம்பியுங்கள்,

சுயநலக் கும்பல்களின் கொடுமை பொருது தனித்து விலகி நின்று தாய்த்திரு நாட்டிற்குத் தொண்டாற்றும் உத்தம தேசபக்தர்களுடன் கூடித் தாங்கள் ஒரு பொது வுடைமைக்காரராக ஆகவேண்டுமென சிலர் விரும்புகி ருர்கள்.

அன்புத்தமிழ், இன்பத்தமிழ், வீரத்தமிழ், காதல் தமிழ் குமரித்தமிழின் பேரால் பல புத்தகங்கள் எழுதி வைரத்தமிழருக்கு அளியுங்கள் என்று மன்ருடிக்கேட்டுக் கொள்ளுகிருேம். தங்களிடம் உள்ள ஒழுங்கு முறையை யும் கட்டுப்பாட்டையும் ஒவ்வொரு தமிழனும் கற்றுக் கொள்ளவேண்டும்.

தங்களிடம் நாங்கள் இல்லாத ஊருக்குப் போகாத பாதையை கேட்கவில்லை. இருக்கிற ஊருக்குப் போகிற பாதையை, தெரிகிற உங்களிடம், புரிகிற நல்ல தமிழில் புரியும்படி சொல்லுங்கள், எழுதுங்கள், பேசுங்கள் என் கிருேம்.

நல்ல வழிகாட்டுங்கள். அவ்வழி மேல் விழி வைத்து செம்மாந்து இருமாந்து செல்ல செந்தமிழ் நாட்டு வீரர் களாகிய இளந்தமிழ்ச்சிங்கங்கள் பெரிதும் கடமைப்பட் டிருக்கிருர்கள்.

43

திரு. மு. வரதராசனர் அவர்கட்கு

புலவர் குழாத்துள் புரட்சி செய்யப் புகுந்துள்ள புத் தொளி மணியே!

சிறுமையைக் கண்டு சீறி எழும் மனப்பான்மையும்

ஏழ்மையைக் கண்டு நிலை கலங்கும் சுபாவமும் நம்மில் மிகச் சிலருக்கே வாய்க்கின்றது. அதிலும், புலமையின் துணைக்கொண்டு வாழ்க்கையின் இன்னல்களைக் காண் பதுடன் நில்லாது அவற்றைப் பயன்படப் படம்பிடித் துக் காட்டும் தங்கள் தொண்டன்றோ முக்கியமான இலக்கியத்தொண்டு!

ஆனால், கவிதை, கவிதை என்று பழம் புராணங் களையே கட்டிக்காத்து, பழம் பெருமைகளைப் படித்துப் படித்துக் கூறாமல் இப்படி தாங்கள் வாழ்க்கையை நோக்கிமுற்பட்டுவிட்டது பலபுலவர் மணிகளுக்குப் பிடிக் காமலிருக்கலாம். அதுவும் இப்படி ஏழைகளுக்காக வரிந்து கட்டிக்கொண்டுப் போருக்குப் புறப்பட்டால் "இலக்கிய உலகம்" பொறுக்குமா?

"ஏழைகளை மட்டும் சட்டங்கள் அடக்கி நசுக்கு கின்றன; செல்வர்களைக் கண்டதும் அந்தச் சட்டங்களே அடங்கி நசுங்குகின்றன. ஏழைகள் சட்டங்களுக்கு அஞ்சு கிறார்கள்; செல்வர்கள் சட்டங்களை விலைகொடுத்து வாங்குகிறார்கள், ஏழைகள் கொன்றால் கொலை என்று பெயர்; செல்வர்கள் கொன்றால் போர் என்றும், தண்டனை என்றும் பெயர்-ஏழை மக்கள் திருடினால் திருட்டென்று பெயர்; செல்வர்கள் செய்தால் வியாபாரம் என்று பெயர் ஏழைகள் ஒழுக்கம் கெட்டால் விபசாரம் என்று பெயர்; செல்வர்கள் ஒழுக்கம் கெட்டால் நாகரிகம் என்று பெயர். செல்வர்கள் புளுகினால் தந்திரம் என்றும் பெயர்"

இவவாறெல்லாம் எழுதுவது இலக்கியமாகுமா? புலவர்குழாம தங்கள் மீது உறுமி எழாதது விந்தை யினும் விந்தையே!

ஆனால், ஒருவார்த்தை; தங்களைப் போற்றும் பிரசுர கர்த்தர்கள் தங்களைத் தமிழ் பெர்னார்டுஷா என்று புகழும்போது எங்களுக்குக் கோபம் கொந்தளிக்கிறது. எத்தகைய கட்டுரையிலும், கற்பனையிலும், கதையிலும்

திருக்குறளையே வேதமாகக்கொண்ட தங்களைத் தமிழ் பெர்னார்ட்ஷா என்று போலிப் பெயரிட்டழைப்பது தமிழன் தன் மதிப்பைக் குறைப்பதாகும் என்று நாங்கள் கருதுகிறோம் பெர்னார்ட்ஷாவின் மேதையை நாங்கள் குறைத்துக் கூறவில்லை. ஆனால் தமிழரிடையே சிந்தனைச் சுடர்கள் தோன்றிச் சிறப்புற்றால். அவர்களை வெளி நாட்டார் போன்றவர் என்று கூறுவதை நாம் வெறுக்கிறோம்; பெர்னார்ட்ஷாவும் இதை வெறுக்கிறார் !!

தண்டமிழ் நாவல் 'செந்தாமரை', சிந்தனைக் 'கதை "கி. பி. 2000' ஆகிய இரு இலக்கியச் சுடர்களும் பல கட்டுரைத் தொகுதிகளும் அளித்து விழிப்புற்ற தமிழ் நாட்டைச் சிந்தனையில் ஆழ்த்திய தங்கள் பெருந் தொண்டைப் போற்ற

" ஒன்றாவுலகத்துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன்றில்"

என்ற குறளைத் தான் கூறவல்லோம். தங்கள் புகழ் மேலும் மேலும் பரவட்டும்! ஆனால், தங்கள் புத்தகங்களும் ஏழைகள் படிக்கும் படியான விலைக்கு இறங்கிவரட்டும்.

44

அமைச்சர். திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்களுக்கு,

அமைச்சர் ஆசனத்தை அழகுசெய்யும் தகையோய்,

இராமகிருஷ்ண வித்யாலயத்தின் மூலம் ஆடம்பரமற்ற சேவைசெய்து அன்று பெயர் பெற்றீர்கள். பின்னர் பொருளாதாரத்துறையில் முதலில் தமிழ்ப் புத்தகங்கள் எழுதவும் தலைப்பட்டீர்கள். இந்தத்துறையில் தாங்களும் திரு J. S. பொன்னையா என்பவரும் தான் முதன்மை பெற்று உழைத்தீர்கள் என்று எண்ணுகிறோம்.

ஆயினும் ஏனோ இதுகாறும் தங்கள் பெருமை வெளி யில் தெரியாது மங்கிக்கிடந்தது? சென்ற முறையில் டெல்லி சட்டசபையில் அங்கத்தினராயிருந்தும் தாங்கள் பிரபலமடையவில்லை.

ஆனால் இன்று சென்னைக்குக்கல்வி மந்திரியாக வந்து எங்களை யெல்லாம் ஒரு கலக்குக்கலக்கி விட்டீர்கள். தமி ழில் கான்வொகேஷன் பிரசங்கம் செய்து புரட்சிக்கு அடிகோலினீர்கள். உடனே ஆந்திரகேசரியும் தங்களை பின்பற்றித் தெலுங்கில் அவர் பிரதேசத்தில் பிரசங்கம் செய்தார்.

இத்துடனுவது தங்கள் தமிழார்வம் நின்றதா? சிறந்த தமிழ்ப்புத்தகங்களுக்குப் பரிசளிப்பதாக வேறல் லவா ஏற்பாடு செய்து விட்டீர்கள்! மேலும் தமிழ் வள ரும் வழியைத்தேட மேலும் மேலும் புனராலோசனைகள் செய்தும் வருகிறீர்கள். இந்த ஆலோசனைகள் சீக்கிரம் முடிந்துவிட்டால் எங்கள் பாடல்லவா ஆபத்தாகிவிடும்! நிமிஷத்துக்கு நிமிஷம் ஒரு சிறு கதையும் மணிக்கு ஒரு நாவலுமாகத் தமிழ் இலக்கியம் அசுர வேகத்தில் முன் னேறி வருகிறது. இது போதாதென்று அகராதி, சிறுவர் இலக்கியம் என்று இன்னும் புது புதுத்துறைகளை புகுத் தப்பார்க்கிறீர்களே! இது தகுமா?

ஆனால், எங்களுக்கு ஒரு தேற்றம். இப்போதெல்லாம் தங்கள் ஆர்வம் அறிக்கை நிலையில்தான் நின்று வருகின் றது. செயல்நிலைக்கு வந்த பின்னல்லவா அதைப்பற்றி நாங்கள் ஆச்சரியப்படவேண்டும்.

அப்படி ஒன்றும் திடும்பிரவேசமாகச் செய்துவிட மாட்டீர்களென நம்புகிறோம்! வந்தனம்.

45

திரு அ. சீனிவாச ராகவன், M.A. அவர்கட்கு

பேராசிரியப் பெருந்தகையே,

வணக்கம். தங்கள் ஆங்கிலப் புலமையோ அபாரம். தமிழிலோ சொல்ல வேண்டியதில்லை. தங்கள் நடையோ "வண்ணக்கலாப நடை, வன் நெஞ்சை மாற்றும் வண்ண நடை, இலக்கிய மறுமலர்ச்சியின் இலாஞ்சனை தாங்கிய நடை"

தாங்கள் அழகிய நடையில் எழுதிய மேல் காற்று, நிகும்பலை நிழல்கள், அவன் அமரன் ஆகிய நூல்களைக் கண்டு நாங்கள் அமரத்துவம் அடைந்து விட்டோம்.

எல்லாம் மெத்த சரி. இறைவனருளால் புலமைக்குத் தக்க அறிவும், சொல்லுக்குத் தக்கதெளிவும் பெற்ற தாங்கள் இன்னும் எவ்வளவோ எழுதலாமே!

மெத்த வளரும் மேற்கத்திக் கலைகளைப் பற்றி இன்னும் எழுதுங்கள். தங்களுக்கு மலையளவு வேலை யுள்ளது.

ஓய்வுள்ள பொழுது உங்கள் பேனா ஓடட்டும். வாழ்க்கைக்கு கம்பன் வழி காட்டியிருக்கிறான் என்று கம்பச்சுவை ததும்ப தாங்கள் பேசும் பேச்சுக்கு எங்கள் பாராட்டு.

அன்பு! வாழ்க!

46

திருமதி. த. ந. ஆனந்தநாயகி அவர்கட்கு

உணவு மந்திரி Y.M.C.A. தமிழ்ப்பாராளுமன்றம்.

தமிழ்த் துடிப்புள்ள தங்கையே!

நன்றி கனிந்த வணக்கம். படைத்தவனருளால் பண்புடன் இருக்கிறீரா?

மாணவ மாணவிகள் நாட்டில் நடைபெறும் அரசியல் முதலிய இயக்கங்களில் கலந்து கொள்ளக்கூடாதென்ற மூடக்கொள்கையை இடித்துத் தவிடுபொடியாக்கி முன்னேற்ற மொன்றே கருதி தமிழ் நாட்டு மேடைகளில்.சொற்போர் புரியும் தமிழிளஞ் செல்வியே!

வாழ்க வானப்பன் அருளால். உங்களைப் போற்றுகிறோம். உங்களுடைய தமிழ்த் துடிப்பைப் பார்க்கும் பொழுது நீங்கள் தமிழ் இலக்கியச் சோலையில் வசந்த கீதம் இசைக்கும் அருட்குயிலாம்—சுத்தானந்தரின் பெண்வாரிசு என்று சொல்லத் தோன்றுகிறது.

உங்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னால் "உருவாகும் சகல கலாவல்லி" என்று சொல்லுவது மிகையாகாது.

நீங்கள் ஆங்கிலப் புலமை நிறைந்தவர், ஒரு விஞ்ஞான மாணவி, இசைவாணி-ஏன்? நாட்டியத்திலோ கலைவாணி, சீர்திருத்த நோக்கம் கொண்டவர்; முன்னேற்றப் பாதையில் செல்பவர். பழமையில் புதுமை காணல்தான் அறிவுடைமை என்ற சிறந்த கொள்கையுடையவர்.

வருங்காலத் தமிழகத்தின் (சுதந்திர இந்தியாவின்) தலைசிறந்த எழுத்தாளர்களிலும் பேச்சாளர்களிலும் முன்னிலையில் நிற்கக்கூடியவர்.

சென்னை Y. M. C. A. பட்டி மன்றத்தின் துணை அமைச்சராகவும், மேரி அரசி கல்லூரித் தமிழ்ச் சங்க அமைச்சராகவும், தாங்கள் செய்யும் தமிழ்த் திருத் தொண்டு பாராட்டுதற் குரியது.

ஆடல் பாடல்—பேசல்—எழுதல் இவற்றில் நடக் கும் போட்டிகளிலெல்லாம் முதற் பரிசு தங்களைத்தேடி வருவதுபற்றி மகிழ்ச்சி. பாராட்டு.

நசிந்துவிடும் போலிருந்த ஒப்பற்ற நமது தமிழர் சமு தாயத்தை அன்று படபடக்கும் தேசியக் கவிகளால் முது கெலும்பு கொடுத்து நிற்கவைத்த உலக மகாகவி நாமுய்ய, நாடுய்ய, ஞாலமுய்ய நயம்பல படைத்த நல் லிசைக் கவி சுப்பிரமணிய பாரதியார் கனவுகண்ட புது மைப் பெண்மணியே! இறைவனருளால் எல்லா நலன் களும் எய்தி பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ் நாட்டில் தமிழரசை விரைவில் காணுவதற்கு முந்துவதோடு நாட் டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டாற்றி வீடோங்க நாடோங்க நலமோங்கச் செய்வீர்.

"நவபாரதத்தின் நாயகமே
நடமுன் வெற்றித்தெம்புடனே"

நன்றி-வந்தனம், அன்பு வாழ்க.

47

ஓவியப்புலவர்—ஆர்யாவுக்கு

ஓவியத்தில் புலமை வாய்ந்த சிகாமணியே,

அன்பு, அன்பு.

சில புத்தகங்கள் மேலட்டை அழகால் விற்பனை யாகிவிடுகிறது. அதற்குக் காரணம் உங்களைப் போன்ற ஓவியர்கள் தான்.

சிலர் மேலட்டையைப் பார்த்து புத்தகம்வாங்கி பெரும் ஏமாற்றமடைகிறார்கள். உதவாக்கரை (குப்பை)

புத்தகங்களுக்குத் தாங்கள் ஓவியம் எழுதித்தருவது கூடாது.

வைரக் குப்பைகளோடு சேர்க்கவேண்டிய புத்தகங்களுக்கே தாங்கள் ஓவியம் எழுதித் தரும்படி வேண்டிக் கொள்கிறோம்.

புத்தகங்களுக்கு அதிகவிலை போடுவோரை காரணம் கேட்டால் ஓவியர்கள்தான் அதற்குக் காரணம் என்கிறார்கள், தாங்களெல்லாம் தயவுவைத்தால் மெத்த வளரும் 'மேற்கத்திக்கலைகளை' யெல்லாம் மலிவுப் பிரசுரங்களாக கொண்டுவரலாம்.

தங்கள் ஓவியத்திறமையைப் பாராட்டுகிறோம்.

அன்பு வாழ்க.

தமிழ் எழுத்தாளர்களுக்கு

தமிழ் எழுத்தாளர்கள் சென்னையில் கூடினார்கள், "எழுத்தாளர் கூட்டமா? என்ன செய்ய முடியும் இவர்களால்?" என்று சிலர் எள்ளி நகையாடினார்கள்.

'கானகத்திலே ராமன் பட்ட கஷ்டத்தை எழுத வேண்டாம்; கர்னாடிக் மில்லிலே ரத்த வேர்வை சிந்தும் தொழிலாளியின் நரவேதனையைப்பற்றி எழுதுங்கள்" என்று சிலர் உபதேசம் செய்தார்கள்.

"இப்படி எழுது, அப்படி எழுது; இதை எழுது, அதை எழுது" என்று எழுத்தாளனுக்கு யாரும் தாக்கீது போடமுடியாது; கூடாது என்று சிலர் சினந்தார்கள்.

இங்கிலையில், எழுத்தாளர்கள் தங்கள் உரிமைகளையும் கடமைகளையுமே எண்ணிப் போராடுவதாய்த்தோற்றுகிறது. ஆனால், அவர்கள் மற்றொரு முக்கிய கோணத்திலிருந்து இதே பிரச்னையை ஆராய்ந்தால் விவாதம் வெகு எளிதில் முடிந்து விடும் என்பது எனது துணிபு. பொருளாதார முறைப்படி 'எழுத்தாளன்' என்பவன் உற்பத்தி யாளனாவான். ('எழுத்தாளன் எழுத்தாளன் என்று நாங்களும் சொல்கிறோமே தவிர,

இந்தப்பதம் சரியானதாகத் தோற்றவில்லை. எழுது பவன் எழுத்தாளனுனல். படிப்பவன் படிப்பாளனு? இதைப்பேசும் நாங்கள் பேச்சாளர்கள்; கேட்கும்நீங்கள் "கேட்பாளர்களா?" ஆனுல், இந்தப்பிரச்னை நமக்கேன், வழக்கில் வந்த சொல்லைக்கூசாது வழங்கத் தயங்குவானேன்?) உற்பத்தியாகும் பொருள் சமூகத்தின் தேவையைப் பொறுத்திருந்தால் தான் விலையாகும் என்பதுமட்டுமல்ல, பொருளாதார விதிப்பிரகாரம் எப்போதும் தேவையும் உற்பத்தியும் ஒன்றுக்கொன்று இணைந்து போகும் இயல்புடையவை.

முதலாளித்துவ உலகில் உற்பத்தி செய்பவன் தன் லாபம் கருதியே உற்பத்தி செய்கிருன் இருந்தாலும், "எனக்கு எது இஷ்டமோ அதை உற்பத்தி செய்வேன்" என்று சொல்ல இன்றைய உலகில் கூட அவனுக்குப் பூரண உரிமை இல்லை! இந்த உரிமை பாராட்டி அவன் வெடி மருந்தையும், விஷத்தையும், அணுக்குண்டையுமே உற்பத்தி செய்து கொண்டு போக முடியாது அதேமாதிரி தான் இலக்கிய கர்த்தாக்களும் தங்கள் இஷடப்படி எழுதித்தள்ளக் கூடாது என்பது ஒரு சாரார் கொள்கை.

ஆனுல், பொருளாதாரத்துறையில் இருப்பது போல் சட்ட பூர்வமான தடை ஒன்றும் இவர்களுக்கில்லை என்பது உண்மை. அரசியல் தடைகளையும் அசங்கியமான தெனத்தடுக்கப் பட்டவையும் தவிரவேறு எதையும் எழுத அவர்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனுல், அதனுல் சமூகம் தாழுமா? வாழுமா? என்று பகுத்துக்கூற ஒரு ஆராய்ச்சியாளனுக்கு உரிமை உண்டா இல்லையா? அப்படியாயின், மக்களைத் தாழ்த்தும் இலக்கியம் வேண்டாம் என்று ஒருவர் கூறுவதில் என்ன தப்பு?

இதில் ஒரு பெரிய சிக்கல் பின்னிக் கிடப்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் குறிப்பிட்ட இலக்கிய முயற்சி சமூகத்தைத் தாழ்த்துமா, உயர்த்துமா என்பது தனிப்

பட்டவரின் அபிப்பிராயம். ஒருவரது அபிப்பிராயம் மற்றொருவருடையதுடன் அடியோடு வேறு பட்டிருக்க லாம். "நான் சொல்வதே சரி" என்று யாரும் சாதிக்க முடியாது. இதற்காக அவர் ஒன்றும் சொல்லக்கூடாது என்று தடைபோடவும் கூடாது.

ஆகவே, 'இப்படி எழுது, அப்படி எழுது' என்று எழுத்தாளர்களை இயக்கி வைக்கச் சமூகச் சீர்திருத்தக் காரர்களுக்கு உரிமை உண்டு. "அதன்படி நான் செய்ய மாட்டேன், என் போக்கிலேயே தான் போவேன்" என்று சொல்லவும் ஒருவனுக்கு உரிமை உண்டு. இதைக் குறித்துச் சுற்றி வளைத்து எதிர்ப்பும் எக்காளமும், ஆத் திரமும் ஆவேசமும் தோன்ற நடப்பதெல்லாம் வீண் விவாதம் தான்.

இந்த வீண் விவாதத்திலும் விதண்டா வாதத்திலும் முக்கியமான பிரச்னைகளை நாம் மறந்து விடுவதுதான் மிகவும் வருந்தத்தக்கது.எழுத்தாளரின் உரிமை எப்படி யாவது இருக்கட்டும். இலக்கியத்தின் தேவைகள் எவை? இன்றைய தமிழ் இலக்கியம் எந்த எந்தத்துறையில் வளர் ச்சி அடைய வேண்டும், அடையக்கூடும்? தமிழ் எழுத் தாளர்கள் இலக்கியத்துக்குச் செய்யக்கூடிய, செய்ய வேண்டிய சேவைகள் எவை? இவற்றுக்கு ஒரு திட் டம் வகுத்து நம் இலக்கியத்தின் உண்மை நிலையை உணர்ந்து கூறினால், அந்தந்தத் துறையில் ஆற் றல் உள்ளவர்கள் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முனையலாமல்லவா?

இந்தத் தேவைகளை வரையறுத்துக் கூற எங்களால் மட்டும் இயலாது என்பதை ஒப்புக் கொண்டு விடு கிறோம். இலக்கியத் தொண்டில் செய்யக்கூடிய காரி யங்களை எண்ணியா முடியும்? ஆனால், தமிழில் அது இல்லையே, இது இல்லையே, என்று அங்கலாய்த்து, அதையே ஒரு வரிசையாய் அடுக்கிவிடலாமல்லவா?

இதைக்கேட்கும் ஒவ்வொரு தமிழன்பரும் தமக்குத் தோன்றும் தேவைகளையும் கூறமுற்பட்டால், அதுவே பெரிய அடுக்காகி, என்ன எழுதுவது என்று ஏங்கி நிற்கும் எழுத்தாளன் முன் மலையாய்க் குவிந்து விடாதா?

தற்காலத் தமிழின் முதல் தேவை ஒரு நல்ல ஆங்கிலத் தமிழ் அகராதி என்பதை உணர்ந்து இதற்கான முயற்சிகள் நடந்து வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமே. ஆனால், ஆங்கிலப்பதங்களுக்குச் சரியான தமிழ்ப்பதங்கள் தெரிந்தெடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். கலைச்சொற்கள் காரணமாக நடந்துவரும் விவாதத்தை உங்களில் சிலர் உணர்ந்திருக்கலாம். Census என்பதற்கு குல, ஸ்திரி, புருஷ, பால, விருத்த, ஆயவ்யய பரிமாணம் என்பது சரியான அர்த்தமா? அல்லது "மக்கள் எண்ணிக்கை" என்பது சரியா? Evoporation என்றால் "பரிசோஷணம், அனலீகரண"மா அல்லது, 'ஆவியாதல்'லா? என்பது போன்ற பெரும் பிரச்னைகளை யெல்லாம், வடமொழி, தனித்தமிழ்ச் "சண்டையாளர்" களுக்கு விட்டு விடுவோம்.

தமிழ்ப்பதங்கள் தயாரிப்பதில் மற்றொரு முக்கியமான பிரச்னையை நாம் அவசியம் கவனிக்க வேண்டும். "Delightful, Happy, gay, Joyous, pleasing" என்ற பல வகை ஆங்கிலப்பதங்களுக்குத் தமிழ்ச் சொற்களுண்டோ என்று கேட்பவருக்கு, "ஓகை, உவப்பு, மகிழ்வு, களிப்பு, இனிமை, கனிவு" எனத்தமிழிலும் இல்லையா என்று ஒரு பேராசிரியர் மடக்கிக் கேட்கிறார்? (குறிப்பு:—சுத்தானந்த பாரதியார்—தமிழுணர்ச்சி) ஆனால், இச்சொற்கள் ஏற்ற மொழி பெயர்ப்பாகுமா என்பது ஐயத்துக்கிடமானது. மேலும், சில இடங்களில், நண்பர் வ. ரா. கூறுவதுபோல், வேறுபட்ட தமிழ்ப்பதங்கள் இல்லை என்பதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். "Impulse, Sensation, feeling, emotion" இவை எல்லாவற்றுக்கும்

உணர்ச்சி என்ற ஒரே பதம் தானே? என்று நண்பர் வ. ரா. கேட்டார். இதை மறுத்துக்கூற எங்களால் இயலவில்லை. இதற்கெல்லாம் சரியான சொற்கள் ஆற்றல் படைத்த அன்பர்கள் கண்டு கூற வேண்டும்.

அகராதிக்கு அடுத்தபடி தமிழிலே அவசியம் எனத் தோற்றுவது இயற்கலை நூல்கள். அணுகுண்டைப்பற்றியும், மின்சாரம்பற்றியும் இத்தகைய பிற விஷயங்கள் பற்றியும் தமிழன் தமிழிலே கற்றுணரவேண்டும். எஞ்சினியரிங் முதற்கொண்டு, கணிதம். வானசாஸ்திரம் தாவர நூல், உள நூல், முதலிய அனைத்தும் அல்லோபதிக்வைத்திய சாஸ்திரம் உள்பட எல்லாம் தமிழிலே வழங்கப்பட வேண்டும் இதற்கு மஹத்தான முயற்சிகளும், மட்டற்ற ஊக்கமும், உற்சாகமும், உழைப்பும் தேவை என்பது உண்மை. ஆனால், மனமிருந்தால், வழி உண்டு என்பது பழமொழியல்லவா? இதையெல்லாம் செய்து முடிக்காத வரையில் "அந்தோ! தமிழன் ஆங்கிலத்துக்கு அடிமையாகி விட்டானே" என்று அங்கலாய்ப்பதில் பயனில்லை.

இவைதவிர, பொருளாதாரம், அரசியல் முதலிய துறைகளிலும நூல்கள் பெருகவேண்டும். கம்பனையும வள்ளுவனையும் இளங்கோவையும் பாராட்டிப்பாராட்டி அத்துடனே இலக்கியத்தொண்டு முடிந்து விட்டதாய்த் தமிழன்பர்கள் கருதக்கூடாது.

தமிழன்பர்கள் காரல்மார்க்ஸையும், கம்யூனிஸத்தையும், பாஸிஸத்தையும்,ஜனநாயகத்தையும் தமிழருக்கு உணர்த்த வேண்டும். இவற்றை எல்லாம், இலக்கியச் சுவையுடன் இயற்றவேண்டும் என்பதை வற்புறுத்திக்கூறுகிறேன்.உயிரற்ற வெற்றுமொழி பெயர்ப்புகள் போதாது. ஜீவன் ததும்பும் ரஸமான மொழி பெயர்ப்புகள் தேவை.

'இலக்கிய விமரிசனம்' என்பது தமிழில் அபூர்வமாயிருக்கிறது. இந்த பெயர்கொண்டு ஒரு புத்தகம் தமிழ் இலக்கியத்தையே குட்டைப்பாசியாய்க் கலக்கிவிட்டது.

அதற்குப்பின் இப்போதுதான் மற்றொரு புத்தகம் வந்திருக்கிறது. இது என்னபயன் தருமோ, தெரியவில்லை. ஆனால், இலக்கியரஸனையும் விமர்சனமும் தமிழில் வளர வேண்டிய துறைகள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மற்றொரு விதமான இலக்கிய விமர்சனம் அல்லது ஆராய்ச்சியும் தமிழில் தழைத்தோங்க வேண்டும். ஆங்கில ஏகாதிபத்திய உன்மத்தன் கூட "உனக்கு இந்தியாவை விட்டுவிட விருப்பமா, ஷேக்ஸ்பியரைக்கைவிட விருப்பமா?'' என்று கேட்டால், "அய்யோ! எனக்கு ஷேக்ஸ்பியர் வேண்டும்; அதைக்கைவிட முடியாது'' என்றுகூறுவான்என்று சொல்வதுண்டு. இருந்தபோதிலும் இன்று அதே நாட்டில் இலக்கிய வளர்ச்சியைச்சிறிது கவனியுங்கள். ஷேக்ஸ்பியரின் நாடகங்களெல்லாம் (Bacon) எழுதியவை என்றஆராய்ச்சிக்குண்டு ஒருபுறம்; ஷேக்ஸ்பியர் நாடகமுறை சிறந்ததல்ல; இப்ஸனும் பெர்னாட்ஷாவும் தான் நாடகத்துறையில் சிறந்து திகழ்வார்கள் என்ற விமரிசனம் மறுபுறம். இதனாலெல்லாம் ஷேக்பியரின் மதிப்பு தாழ்ந்துவிட வில்லை என்பதைத்தான் நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டும்.

ஆனால், தமிழ்நாட்டில் இத்தகைய விமர்சனங்கள் தலைப்பட்டால் கூக்குரல்கள்கிளம்பி விடுகின்றன. கம்பன் கவிதையில் நாங்களும் ஈடுபட்டவர்கள்தான். அதற்காகக் கம்பரில் நாம் குறைகளாய் கருதுவதைச் சில நண்பர்கள் எடுத்துக்கூறும்போது நாங்கள் ஏன் அலரிக்கொண்டு எதிர்வாதம் செய்ய முற்படவேண்டும்? இலக்கிய விமரிசனத்திலும் எழுத்தாளன் தன் உரிமையை உபயோகிக்கலாமல்லவா? திருவள்ளுவரின் குறளில் முதல் இரண்டு அதிகாரங்கள் அவர் எழுதியதல்ல என்று வ. உ, சிதம்பரனார் உரையில் கூற முன்வந்தால், அது சிறந்த ஆராய்ச்சியின் அறிகுறி என்று பாராட்டி நாம் ஆராய்வதல்லவா சரி? இதை விட்டு தெய்வப்புலவரின் பொய்யா மொழி

யில் குற்றம் கூறுவதா? என்று கண்டித்தால் இலக்கியம் சாக்கடைத் தேக்கமாய், என்றென்றும் பழமைக்கு அடிமையாய்க் கிடக்கவேண்டியதுதான். ஆகவே, இத்தகைய உயரிய ஆராய்ச்சிகளும் விமர்சனங்களும் ஏராளமாய் வரவேண்டும். "நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று கூசாது கூறிய நக்கீரர் மரபில் வந்த நாம் நம்மனத்தில் நினைப்பதை வெளியில் கூற அஞ்சுவதேன்?

விமரிசனம் ஒரு புறமிருக்கட்டும்; அந்தக் கவிகளுக்கு அர்த்தமும் விளக்கமும் நாம் சரிவர வைத்திருக்கிறோமா? ஒரு திருக்குறளுக்கு தனித்தனியே, பரிமேலழகர் உரை, மணக்குடவர் உரை, வ. உ. சி. உரை, முதலியனவும் இவையெல்லாம் ஒருங்கே கலந்த ஒரு கலப்புப் பதிப்பும் (Variorum Edition என்று இதை ஆங்கிலத்தில் சொல்வார்கள்) வேண்டும். இதேபோல் தான் பிறவற்றுக்கும். ஷேக்ஸ்பியர் இலக்கியத்தைப் பாருங்கள். ஒவ்வொன்றுக்கும் ஒரு Deightor பதிப்பு. Warwick பதிப்பு, Verity பதிப்பு, Variorum பதிப்பு என்றெல்லாம் வெவ்வேறு பதிப்புகள். இது தவிர, Stafford Brooke, A. C. Bradley முதலியவர்களின் ஆராய்ச்சிகள். ஆனால், எந்தத் தமிழ்க் கவிக்கு இத்தகைய விளம்பரங்களும் விமரிசனங்களும் விளங்குகின்றன. ஒரு பாரதியார் நம்மிடையே அகப்பட்டால், அவருக்கு காப்பிரைட்போட்டு ரேடியோவிலும், சினிமாவிலும், இசைத்தட்டிலும் அவர் பரவாமல் தடை! இலக்கிய வளர்ச்சிக்கு இது உகந்ததா?

இன்னும் நம் கல்வி மந்திரி கூறியது போல், குழந்தைகள் இலக்கியம் நம்மிடையே பரவவில்லை அழகிய படங்களின் மூலமே ஆங்கில சிறு கதைகளைச் சித்தரித்துப் பல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. இத்தகைய முயற்சிகள் இன்னும் தமிழில் எவரும் செய்ய முற்படக் காணோம்.

இப்படியே, எங்கள் பட்டியலில் அடங்கிக் கிடக்கும் எத்தனையோ குறைகளைக் கூறிக்கொண்டு போக விருப்பந்தான். ஆனால், உங்களில் அனைவருக்கும் தலைவலி மருந்து அருகில் இருப்பது என்ன நிச்சயம்?

இப்படியெல்லாம் நாங்கள் குறைகளைக் கூறுவதால், தமிழின் இன்றைய நிலைமை படுமோசமானதென்று நண்பர்கள் எண்ணிவிடக்கூடாது. சிறு கதை இலக்கியம் இன்று தமிழில் சிறந்து விளங்குகிறது. நவீனங்களும், நல்ல கதைகளும் ஏராளமாய் இருக்கின்றன. கவிதையிலும் நமக்குக் குறைவில்லை என்பது பெருமைப்பட வேண்டிய விஷயம். கட்டுரைத் துறையிலும் ஓரளவு முன்னேற்றம் காண்கிறோம். நாடகத் துறைமட்டுந்தான் சரியானபடி வளர்ச்சியுறக் காணோம். படிப்பவர்கள் தொகை இன்று அதிகம் என்பது பெரிய விஷயம்.

ஆனால், இந்த சாதாரண இலக்கிய வளர்ச்சி மட்டும் போதாது என்றுதான் தனிப்பட்ட துறைகளில் எமக்குத் தோன்றும் குறைகளைக் கூறி ஒரு பட்டியல் படித்தோம். இவற்றைக் கூட்டவோ குறைக்கவோ, எதிர்க்கவோ, ஏற்கவோ உங்கள் அனைவருக்கும் உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொள்வதற்கு முன், எங்கள் உயிர் நண்பர் புலவர்மணி ஆ. முத்துசிவன் அவர்கள் கருத்தை உங்களுக்கு எடுத்துரைக்கிறோம்.

"நகல் நடையர் வேண்டாம், ஒருமைக் கட்டான் கற்ற; நற்றுடொழார்; கற்றச்சன்; முட்டகழி; கடவுட்டன்மை, முட்டாட் டாமரை" என்று வரும் பல்லுடைக்கும் சந்திகளில்தான் பொதிகைமலை முத்திரையைக் காண முடியும் என்று சாதிக்கின்ற நவீன எழுத்தாளர்கள் வேண்டாம். வேண்டவே வேண்டாம். "மஹா உத்கிருஷ்டமான பாவனு பிரகர்ஷம் இதோ காணப்படும் வாக்கியங்களில் ஜாஜ்வல்யமான காந்தியோடும் ஸ்பஷ்டமாக

வும் விகசித்து நிற்பதை நாம் காணலாம்" என்று எழுதுகின்ற மணிப்பிரவாள எழுத்தாளர்களும் சற்று பொதிகை வழிபாட்டில் ஈடுபட்டால் நல்லது. மற்றும் பொருளற்ற அடுக்குமொழி மிடுக்கு நடை ஸ்ரீமான் ஐயஹோ அம்மஹோவும் சற்று விலகிநிற்கட்டும். ஆடம்பரமான அடைமொழி உயிர்ச்சத்தை வாங்கும் புல்லுருவிகள். இன்னும் கன்னியாகுமரியில் தொடங்கி கல்லறைக்குள் கால்வைக்கு மட்டும் முற்றுப்புள்ளி இட்டாமல் உம், உம், உம், என்று உறுமிக்கொண்டிருக்கும் உறுமி எழுத்தாளர்களை நாடு கடத்திவிடுவோம்."

வந்தனம். அன்பு வாழ்க.

இறுதிப்போர்

தமிழ் உலகத்துக்கு

புத்துயிர் பெற்றுப் பூத்துக் குலுங்கும் கற்பகச் சோலையாய்த் திகழும் தமிழகமே!

பத்தாண்டுகளுக்கு முன் நீ இருந்த நிலைமையுடன் இன்றைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்மொழி மிகவும் முன்னேறி யிருக்கிறது என்பது எண்ணம். தமிழ் மொழியின் வளர்ச்சியில் இது ஒரு புரட்சி யுகம் என்றே கருதவேண்டும்.

ஆனால், இந்தப் புரட்சி போதாது; போதவே போதாது; தமிழிலே நிறைவேற வேண்டிய காரியங்கள் இன்னும் எண்ணற்றவை இருக்கின்றன. தமிழனை ஆங்கில மோகம் விட்டு விலகும் காலம் இன்று வந்துள்ளது. ஆனால், தலை வலிபோய்த் திருகுவலி வருகிறது போல தமிழன் ஆங்கிலப் பித்தை அழித்து இந்திக்கு அடிமையாய் விடுவானென்று அஞ்சுகிறோம். தமிழன் பிறமொழி

களைக் கற்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தமிழுக்குத்தான் தமிழன் முதன்மை அளிக்கவேண்டும் என்பது எங்கள் கருத்து.

தமிழுக்கு முதன்மையளிக்கத்தக்க தமிழன் முன் வந்தால், இன்றைய தினம் தமிழ் மக்கள் அனைவரும் எழுதப்படிக்கத் தெரியுமாறு செய்யும் முயற்சிகளில் முனைய வேண்டும். அரசாங்கத்தாரைப் பத்தாம் வகுப்புவரையில் கட்டாய இலவசக்கல்வி வழங்குமாறு செய்யவேண்டும். கல்லூரிகளிலும் அறிவியல், கணக்கு முதலான பாடங்களையும் தமிழிலே—புரியும் தமிழிலே—போதிக்கத் திட்டங்கள் வகுக்கவேண்டும். இஞ்சினியரிங் முதல் சரித்திரம் வரை எல்லாம் தமிழிலே அமுலுக்கு வர வேண்டும்.

தமிழிலே முதன்மையான அகராதிகள் ஆங்கிலத்திலிருந்தும், பிறமொழிகளிலிருந்தும்—அழகிய அகராதிகள் அநேகம் வேண்டும். தனிமரம் தோப்பாகாது, ஒரு தமிழ் லெக்ஸிகன் மட்டும் அகராதிக் குறையை நீக்க முடியாது. ஆங்கிலத்திலே (Webster. Chambers. Oxford) என்று முக்கியமான அகராதிகள் (Standard Dictionary) ஏற்பட்டிருப்பது போல் தமிழிலும் பல அகராதிகளிலிருந்து சில முக்கிய அகராதிகளைத் தேர்ந்தெடுக்கும் நிலையில் தமிழன் இருத்தல் வேண்டும். இன்னும் தமிழில் எழுத்துக்கள் வேண்டும். பிறமொழியிலுள்ள F, Z போன்ற ஒலிகளும், ஹிந்தியிலுள்ள 'க்' 'ச' போன்றவற்றின் உச்சரிப்பில் வரும் நான்கு ஒலிகளும் தமிழிலே வழங்கத்தக்க சொற்கள் வேண்டும். தமிழனுக்காக இவை வேண்டியிராவிட்டாலும் பிறமொழியினர் நன்கு தமிழ் கற்றுணர இவை உதவும், இந்தத் தொண்டிலும் தமிழன்பர்கள் முனையவேண்டும்.

இன்றைய தமிழ் இலக்கியத்தின் சிகரமாய்ச் சிறுகதை நிலவுகிறது. தமிழனது தற்காலப் பண்பிலே, இது

வளர்ச்சிக்கு அறிகுறி என்றே நாங்கள் கருதுகிறோம். ஆனால் இத்துடன் முற்றுப்புள்ளி போட்டு விடாமல், நாவல், நாடகம் முதலிய துறைகளிலும் இலக்கியம் ஒருங்கே முன்னேற வேண்டும் என்பது எங்கள் பேரவா.

இன்னும் செய்யவேண்டிய, தமிழர் செய்யக்கூடிய பணிகளை எடுத்து கூறிக்கொண்டே போனால், அதுவே ஒரு தனிப் புத்தகமாய் விடுமென அஞ்சுகிறோம். செய்ய வேண்டியது ஒரு புறமிருக்க, இன்றைய உலகில் செய்யத் தகாதன சில இருப்பதையும் எடுத்துக் காட்டினாலல்லவா எங்கள் இறுதிப் போர் வெற்றி முழக்கத்துடன் முடியும்?

இன்றைய தமிழுலகத்திலே பிணக்குகளும், பூசல்களும், கணக்கின்றி நிறைந்திருப்பதைக் காணுந்தோறும் எங்கள் உள்ளம் நைந்து உருகுகின்றது. புலவர் குழாங்களிடையே பூசல்கள்; எழுத்தாளர்களிடையே எண்ணற்ற கட்சிகள்: தமிழ்த் திருத்தொண்டர்களிடையும் கூடப் பலப் பிரிவுகள் ! இந்த நிலைமை இன்றே, இப்பொழுதே மாறவேண்டும். இலக்கணத்தைக் கண்டு எள்ளி நகையாடுகிறது ஒரு கூட்டம்: சந்திப்பிழைகள் சந்தி சிரிக்கின்றதே என்று சச்சர விடுகிறது மற்றொரு கூட்டம்; "எளிய தமிழ்மொழிகள் எங்களுக்கெதற்கு? வடமொழியின் 'கம்பீரத்வனி'யே எங்களுக்குக் 'கர்ணாம்ருதம்' என்று 'கோஷிக்கிறது' மற்றொரு 'கோஷ்டி'. இவற்றினிடையே அகப்பட்டுக் கொண்டு தமிழன் தத்தளிக்கிறான்; தமிழுக்கே இனிமை இல்லையோ என்று கூட—வியக்கிறான். இந்த நிலைமையை மாற்றத் தமிழன்தான் விழித்தெழ வேண்டும்.

தமிழ் இலக்கியத்தின் பெயரால் இன்று ஏமாற்று வித்தைகள் நடக்கின்றன. பழங்காவியத்தைப் புரட்டிப் போட்டு "ஆஹா! ஊஹூ" என்று ஆச்சரியக் குறிகளை அளவின்றி நிரப்பித் தாங்கள் தமிழுக்குத்தனித்தொண்டு

புரிந்து விட்டதாய்த் தலைநிமிர்ந்து ஆர்ப்பரிக்கின்றனர் சிலர். "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமையில்லை" என்னும் உண்மையைத் தமிழன் இவர்களுக்கு உணர்த்தவேண்டும். பழம் பெருமைகளைப் பேசிப்பேசித் தமிழன் பிறருக்கு அடிமையாயிருப்பதிலேயே ஆறுதல் கொண்ட காலம் போதும் இனி மலரவிருக்கும் புது யுகத்தில் அரசாளும் நடவடிக்கை முதல் அனைத்தும் தமிழிலேயே நடத்தத் தமிழன் தன்னை தயாரித்துக் கொள்ளட்டும்.

தமிழுலகமே! உனக்கு நாங்கள் விடுக்கும் இறுதி அறிவிப்பு இதுவே! உன்னைக் குலைக்க எவராலும் முடியாது; உன் வளர்ச்சியைத் தடுக்க யாருக்கும் சக்திகிடையாது; ஆனால் உன் போக்கு முற்போக்காய் இருத்தல் வேண்டும். தற்காலம் நடக்கும் புரட்சியுகம் உன்னை எழிலுடன் திகழச்செய்தல் வேண்டும். இதுவே எங்கள் விருப்பம், வேண்டுகோள்—வாழ்த்து. போர்வெறி பொன்றுக—பொறாமை நலிக—நச்சிருள் ஒழிக—நலமெலாம் ஓங்குக.

3643

தமிழ் வாழ்க! தமிழ் வெல்க!! அன்பு வாழ்க!!!

கே. வி. வி. பழம்நீ.